ஓம்

ஸ்ரீராமகிருஷ்ணாய நம:

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

உபந்நியாசங்களான

இராமாயண ரகசியம்,

மகாபாரத ரகசியம்

இவை

ஸ்ரீ சுவாமி சுப்பிரமணிய சிவம்

(சுவதந்திராநந்தர்)

இயற்றியது.

பதிப்பாசிரியர்:—

சை. ந. பாலசுந்தரம் தலைவர்,

(மஹான் சை. இரத்தினசெட்டியார் பௌத்ரன்),

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை,

நெ. 4/34, நயினியப்ப நாயக்கன் வீதி,

பார்க் டவுன், (P. O.)., சென்னை.

---

py Right Registered] [All Rights Reserved.

அனேக நாளாய் எதிர்பார்த்திருந்த நூல் வெளியாகிவிட்டது!

ஸ்ரீ ஸ்வாமி ராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்.

(முதற் பாகம்)

[நவசக்தி மதிப்புரை—10-7-1925.]

இதன் விலை ஸ்வாமி படத்துடன் விலை ரூபா 1-4-0.
உயர்ந்த கிளேஸ் பதிப்பு விலை ரூபா 2.

ஹிந்து மதத்தைச் சீர்திருத்தி அதன் பெருமையை உலகிற்கு வெளிப்படுத்த வங்கத்தில் ஒரு வீரர் தோன்றினர்; பாஞ்சாலத்தில் ஒரு கேசரி எழுந்தது. விவேகாநந்தருடைய வீர உரைகளும் இராமதீர்த்த பரமஹம்ஸருடைய அருள் மொழிகளும் என்றும் வற்றாத ஊற்றுகளை என்று கூறலாம். இப்பொழுது நமது பார்வைக்கு ஸ்வாமி இராமதீர்த்தருடைய சரித்திரமும் அவருடைய உபதேசங்களும் அடங்கிய நூலின் முதற்பாகம் வரப்பெற்றோம். விவேகாநந்தருடைய மொழிகளையும் வேறு சில அரிய நூல்களையும் தமிழ் நாட்டிற்கு வழங்கியுள்ள ஸ்ரீமான் ஆர். நாராயணசாமி ஐயர் இந்நூலாசிரியர் எனின், இதன் சிறப்பைப்பற்றி நாம் அதிகம் கூற வேண்டுவதில்லை. இந்தியா தற்போதுள்ள நிலையில் இத்தகைய நன்னூல்கள் கிராமங்கள்தோறும் பரவவேண்டும். மதப்பற்று குறைந்து வருகிற இக்காலத்தில் இந்த நூல்கள் எவ்வளவு நற்பயனை அளிக்கும் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை.

இதுவரையில் தமிழில் வெளிவராத அரிய புத்தகம் இது ஒன்றே! இந்நூலில் அடங்கிய விஷயங்கள். (1) முன்னுரை, (2 இராமதீர்த்தரின் அற்புத சரித்திரம், (3) ஆத்மாநுபவத்திற்கு மார்க்கம், (4) ஓங்காரத்தோனி (5) ஓம் என்ற மஹா மந்திரத்தின் மகிமை, (6) பின் வரும் காரணங்களுக்காகத் தனியே நடந்து உலாவச்செயல், (7) உண்மையான சுகம் எது? (8) மதப்பயிர்ச்சியின் பூர்த்தி, (9) கிருஷ்ண பரமாத்மா (10) மாயை, (11) சமாதிநிலை கலையாத குடும்ப வாழ்க்கை, (12) தேசபக்தி, (13) ஹிந்துமதத்தின் முற்கால தற்கால நிலை, (14) எக்ஞம் செய்வதன் இரஹஸ்யம், (15 வேதாந்தமும் தன சேர்க்கையும், (16) ஜாதி தத்துவம், (17) சிறு கதைகள் (18) ஹிமாசல காடுகளிலிருந்து கடிதங்கள் வருதல் முதலியன. ஷை 2-பாகம் 31 விஷயங்கள் ரூ. 3-12-0.

விலாசம் தெரிவிப்போருக்கு 100-வருஷம் காலண்டர் இனாம்.

முகவுரை

இராமாயணம், மகாபாரதம் இவை யிரண்டும் ஹிந்துக்களுக்கு மிகமிகச் சிறந்த, தெய்வீக இதிகாசங்களாம். ஏன்? "உலகில் வேறெந்த ஜாதியிலும், வேறெந்தத் தேசத்திலும் இம்மாதிரி இதிகாசங்கள் இல்லவே யில்லை" என்று தைரியமாகச் சொல்லிவிடலாம். "இவை யிரண்டும் சரித்திர சம்பந்தமானவை யல்ல" என்றும், "வெறுங் கற்பனைக் கதைகளே" என்றும், இக்காலத்து மேனாட்டுப் படிப்பினால் புத்தி தடுமாறியிருக்கும் பலர் கூறலாம். ஆயினும், அப்படியே இவை கற்பனைக் கதைகள் தாம் என்று வைத்துக்கொண்டாலும், இவற்றுக்கு நிகராக வேறு தேசத்துக் கவிஞர் எவராலும் ஒரு கற்பனைக்கதையும் இயற்றப்படவே யில்லை. மனிதனுக்கு உலக வாழ்க்கைக்கு வேண்டிய சகல தர்ம நீதிகளையும் தம்மகத்தே கொண்டு சித்தசுத்தி யுண்டு பண்ணி, அவன் மோக்ஷ மடைதற்கு அர்கனாகும்படியான மார்க்கத்தைப் போதிப்பதே லக்ஷியமாகக் கொண்டு, எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களாக இந்தியர்களுடைய மனத்தை யெல்லாம் ஐக்கியப்படுத்தி வருகின்ற இவ்விரு இதிகாசங்களும் இவ் வுலகில் ஈடற்றவை யென்பதில் சந்தேகமே யில்லை. இவை வெறும் கற்பனைக் கதைகள் அல்ல, உண்மையான சரித்திரங்களேயாம்; அக்காலத்துக் கேற்றவாறு, அப்பொழுதிருந்த ஜனங்களுடைய மனம் ரமிக்குமாறு, அவர்கள் நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்களாயிருக்குமாறு; உலகினர்க்குத் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் சதுர்வித புருஷார்த்த சாதனங்கள் எளிதில் சாத்திய மாகுமாறு எழுதப்பட்ட சரித்திரங்களாம் இவை.

ஸ்ரீராமரைப்போன்று ஒரு தர்ம ராஜாவும், சீதையைப் போன்று ஒரு பதிவிரதா ஸ்திரீயும், லக்ஷ்மணனைப் போன்று ஒரு உண்மைச் சகோதரனும், சாதாரண மனிதனுடைய கற்பனைக்கு எட்டாதவர்களாம்; தசரதனுடையதைப் போன்ற வாக்கு பரிபாலனம், ஸ்ரீராமருடையதைப் போன்ற பெற்றோர் வாக்கிய பரிபாலனம், பரதனுடையதைப் போன்ற சகோதர வாக்கிய பரிபாலனம், ஹனுமாரைப் போன்ற ஆப்தஸேவகன் இவை உலகில் அரியவிஷயங்களாம்.

பொறுமையே பூஷணமாய யுதிஷ்டிரர், அழுக்கற்ற மனத்தையும் அளவற்ற பலத்தையுமுடைய பீமன், அவசரப்படாது அமைதியையே ஆபரணமாகக் கொண்டு சென்ற இடமெல்லாம் ஜயத்தைத் தவிர வேறொன்றையும் அறியாத அர்ஜுனன், தமயன் தலையறுந்து விழ நாள் வைத்துக்கொடுக்கும்படி கேட்டபொழுதும் உண்மையைத்தவிர வேறொன்றையும் உரையாத சகாதேவன், சத்தியமும் தர்மமும் பாண்டவர்களிடத்தே யிருக்கின்றதென்றறிந்தும் 'உண்டவீட்டுக் கிரண்டகம் செய்யக்கூடாது' என்ற உத்தமமான கொள்கையுடன் துர்யோதனன் பக்கம் சேர்ந்த பீஷ்மர் துரோணர் முதலியவர்கள், உயிர் போய்விடுமென்றறிந்தும் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு வந்த தர்மதேவதையையே தானம் செய்து உயிர் நீங்கிய—"இல்லை" என்று வந்தவர்க்கு "இல்லை" என்று ஒருபொழுதும் சொல்லாது எடுத்தெடுத்துக் கொடுத்துக் கொடுத்து "இவனே வள்ளல்" என்று பெயரெடுத்த—கர்ணன், அண்ணன்மார் தொண்ணூற்றொன்பது பேரும் வேற்றெண்ணமுடையவர்களாயிருக்கிறார்களென்பதை அறிந்தும் அவர்க

ளுடைய கோபத்தைப் பாராட்டாது, ஆங்குக் கூடி யிருந்த சபையினர்கள் அனைவரும் வெட்க முறும்படி நடு நிலைமையாகத் தர்மத்தை யெடுத்துரைத்த விகர்ணன், 'வில் லிருந்தால் தின்ற சோற்றுக்கடன் கழிப்பதற்குத் துர்யோ தனன் பக்கம் சேர்ந்து யுத்தம் செய்யவேண்டிவரும்' என்று நினைத்து வில்லையொடித்து எறிந்துவிட்டுச் சென்ற விதுரன், இவர்களெல்லோருக்கும் மேலே இந்த மகா பாரதத் துக்கே ஆதிபுருஷனாய், ஜாரசோர சிகாமணியாய், சர்வஜால தந்திரசாலியாய், தாம் அர்ஜுனனுக்கு உபதேசித்த பகவத் கீதைக்குத் தாமே பிரத்தியட்ச திருஷ்டாந்தமாய் விளங் கிய ஸ்ரீ கிருஷ்ணன் இவர்களைப் போன்ற பாத்திரங்கள் வேறு எந்த இதிகாசத்திலும் இல்லவே யில்லை. ஐந்தாம் வேதமென்று சொல்லும்படி யவ்வளவு பெருமை வாய்ந்தது, அவ்வளவு தர்மநீதிக ளடங்கியது, இந்தப் பாரதம்.

இவை யிரண்டையும் ஸ்ரீ விவேகாந்த ஸ்வாமிகள் மேனாட்டாருக்கு மிகச் சுலபமான நடையில் எடுத்துக் கூறியிருக்கிறார். இவ் விரண்டு இதிகாசங்களின் பெருமை யையும், இவற்றை யெடுத்துச் சொல்லிய ஸ்வாமிகளின் மகிமையையும் அநேகமாக இந்தியர்கள் அனைவரும் அறிவாராதலின், நான் அதிகமாக ஒன்றும் எழுதாது விடுக் கின்றேன். தமிழ் நாட்டினர் இவற்றை ஏற்றுக்கொள் வார்களென்று நம்புகிறேன். மகா சக்தி யருள்புரிக.

ஸ்ரீ பாரதாச்சிரமம்,
ராயப்பேட்டை,
சென்னை.

ஸ்வதந்திரானந்தன்
(சுப்பிரமணியசிவம்)

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாயநம:

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

உபந்நியாசங்களான

இராமாயண ரகசியம்

[இஃது ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரால் அமெரிக்கா, காலிபோர்னியாவில், பஸடேனியா என்னும் நகரில் 1900-ம் வருஷம் ஜனவரிமீ 31-ம் தேதி செய்யப்பட்டதொரு பிரசங்கம்.]

சம்ஸ்கிருதபாஷையிலே இரண்டு பெரிய காவ்யங்கள் இருக்கின்றன; அவை மிகவும் புராதனமானவை. நூற்றுக்கணக்கான வேறு காவ்யங்களு மிருக்கின்றன. சம்ஸ்கிருத பாஷையானது சென்ற இரண்டாயிரம் வருஷங்களாகப் பேசும்பாஷையா யில்லாதிருந்துவிட்டாலும், அந்த பாஷையும் நூல்களும் இன்று வரையில் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. நான் இப்பொழுது இராமாயணம், மகாபாரதம் எனப்படுகின்ற இரண்டு மிகமிகப் புராதனமான காவ்யங்களைப்பற்றி உங்களிடம் பேசப்போகிறேன். அவை பூர்விக இந்தியர்களுடைய மாதிரிகள், வழக்கங்கள், ஜன

சமுதாயஸ்திதி, நாகரிகம், முதலியவற்றைக் கொண்டிருக்கின்றன. இந்தக் காவ்யங்களிலே மிகமிகப் புராதனமானது, ராமருடைய சரித்திரமாகிய ராமாயண மெனப்படுகிறது. இதற்கு முன்னால் சில காவ்ய நூல்கள் இருந்தன;—ஹிந்துக்களுடைய பரிசுத்த கிரந்தங்களாகிற வேதங்கள் பெரும்பான்மையும் ஒருவித இசையிலேயே எழுதப்பட்டுள்ளன. ஆனால், இந்த நூல்தான் காவ்யத்துக்கு ஆரம்பமென்று இந்தியாவிலே எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கவி அல்லது மகாத்மாவினுடைய பெயர் வால்மீகி என்பதாம். பின்னர், அநேக காவ்யக்கதை அந்தப் புராதன கவியினால் ஆக்கப்பட்டனவென்று சொல்லப்பட்டன; வர வர, அவருடையவையல்லாத அநேக சுலோகங்களை 'அவரே ஆக்கியவர்' என்று சொல்வது மிகவும் சாதாரண வழக்கமாய்ப் போய்விட்டது. இடையில் சேர்க்கப்பட்ட இவையெல்லாம் இருந்தபொழுதிலும், அது நமக்கு உலகத்து நூல்களிலே ஒப்பற்று மிக அழகியதொரு ஏற்பாடாக வந்துகொண்டிருக்கிறது.

ஒரு வாலிபன் இருந்தான்; அவனால் தனது குடும்பத்தை எவ்விதத்திலும் ரக்ஷிக்க முடியவில்லை. அவன் பலமுள்ளவனும் சக்தியுள்ளவனுமு மிருந்தான், கடைசியாக வழிப்பறிக்கொள்ளைக்காரனானான். அவன், தெருவிலே போகும் ஜனங்களை அடித்து, அவர்களைக் கொள்ளையடித்து, அந்தப் பணத்தினால் அவன் தன்னுடைய பிதா, மாதா, மனைவி, குழந்தைகள் முதலியவர்களைக் காப்பாற்றிவந்தான். இப்படியே இடைவிடாமல் நடந்துவர, ஒருநாள் நாரதர் என்

னும் பெயரிய ஒரு பெரிய மகாத்மா அந்த வழியே போய்க் கொண்டிருந்தார். திருடன் அவரை மறித்தான். அந்த மகாத்மா திருடனைப் பார்த்து, "ஏன் என்னைக் கொள்ளையடிக்க வருகிறாய்? மனுஷ்யர்களைக் கொள்ளையடிப்பதும் கொல்வதும் பெரிய பாபமாம். ஏன் இந்தப் பாபத்தையெல்லாம் கட்டிக்கொள்கிறாய்?" என்றார்.

அந்தத் திருடன், "நான் இந்தப் பணத்தினால் என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற விரும்புகிறேன்" என்றான்.

அந்த மகாத்மா, "அப்படியானால், உன்னுடைய பாபத்திலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வார்களென்று நீ நினைக்கிறாயா?" என்று கேட்டார்.

அத் திருடன், "நிச்சயமாய் அவர்களுக்கும் பங்கு உண்டு" என்றான்.

அந்த மகாத்மா "நல்லது, என்னை யிங்கே பத்திரமாகக் கட்டி வைத்துவிட்டு, நீ வீட்டுக்குச் சென்று, நீ கொண்டுபோய்க் கொடுக்கிற பணத்திலே அவர்கள் பங்கெடுத்துக் கொள்கிறதுபோல, உன்னுடைய பாபத்திலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்வார்களா? என்று உன்னுடைய ஜனங்களைக் கேட்டுவா" என்றார்.

அவன் அப்படியே தனது பிதாவினிடம் சென்று, "அப்பா! நான் உன்னை எப்படிக் காப்பாற்றுகிறேன் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

அவன், "எனக்குத் தெரியாது" என்று மறுமொழி கூறினான்.

"நான் திருட்டுத்தொழில் புரிகிறேன்; மனிதர்களைக் கொன்று கொள்ளையடிக்கிறேன்," என்றான்?

"அப்படியா செய்கிறாய்? ஏ, ஜாதிப்பிரஷ்டா! போ வெளியே."

அவன் பின்னர்த் தன்னுடைய தாயாரிடம் சென்று, "அம்மா! உன்னை நான் எப்படிக் காப்பாற்றுகிறேன் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது" என்று அவள் மறுமொழி கூறினாள்.

"கொள்ளையும் கொலையும் புரிந்துதான்."

"ஆ! எவ்வளவு பயங்கரமானது!" என்றாள் தாயார்.

"ஆனால், என்னுடைய பாபத்திலே நீ பங்கெடுத்துக் கொள் கிறாயா?" என்றான் புத்திரன்.

"நான் ஏன் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்? நான் ஒருபொழுதும் கொள்ளையடித்த தில்லையே" என்று மறு மொழி பகர்ந்தாள் தாயார்.

பின்னர், அவன் தனது மனைவியினிடம் சென்று "நான் உங்களெல்லோரையும் எப்படிக் காப்பாற்றுகிறேன் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாது" என்றாள் அவள்.

"நான் கொள்ளை யடிக்கிறேன்; அநேக வருஷங்க ளாக ஜனங்களைக் கொள்ளையடித்து வருகிறேன். அப்படிச் செய்துதான் உங்களெல்லோரையும் காப்பாற்றி வரு கிறேன். இப்பொழுது நான் அறிய விரும்புவது யாதெனில், என்னுடைய பாபத்திலே நீ பங்கெடுத்துக்கொள்ளத் தயா ராயிருக்கிறாயா? என்பதேயாம்" என்றான் அவன்.

"அது முடியாது. நீ எனது புருஷன்; என்னை ரக்ஷிக்க வேண்டியது உனது கடமை."

கொள்ளைக்காரனுடைய கண்கள் திறக்கப்பட்டன. அதுதான் உலக சம்பிரதாயம்,—"நான் எவர்களைக் காப்பாற்றுவதற்குக் கொள்ளையடித்து வருகிறேனே அந்த என்னுடைய மிகமிக நெருங்கிய பந்துக்களும் எனது பாபத்திலே பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்களாம்."

அந்த மகாத்மாவைக் கட்டிவைத்திருந்த இடத்துக்கு அவன் திரும்பிவந்து, அவருடைய கட்டுக்களை யவிழ்த்துவிட்டு, அவருடைய பாதங்களிலே விழுந்து, நடந்த எல்லாவற்றையும் சொல்லி "என்னைக் காப்பாற்றவேண்டும்; நான் என்ன செய்வேன்?" என்றான்.

அந்த மகாத்மா "நீ இப்பொழுதிய வாழ்க்கையை விட்டுவிடு; உன்னுடைய குடும்பத்தில் எவரும் உன்னை உண்மையில் நேசிக்கிறதில்லை யென்பதை நீ பார்க்கிறாய். ஆகையால், இந்தப் பிரமைகளை யெல்லாம் விட்டுவிடு. அவர்கள் உன்னுடைய செழிப்பிலே பங்கெடுத்துக் கொள்வார்கள்; உன்னிடம் ஒன்றுமில்லாமற்போகிற நிமிஷத்திலேயே, அவர்கள் உன்னைக் கைவிட்டுவிடுவார்கள். நீ செய்யும் தீமையிலே பங்கெடுத்துக்கொள்பவர் எவரும் இல்லை. ஆனால், நீ செய்யும் நன்மையிலே அவர்களெல்லோரும் பங்கெடுத்துக்கொள்வார்கள். ஆகையால், நாம் நன்மை செய்தாலும், தீமை செய்தாலும் நம்மை விடாது நம் பக்கல் இருக்கின்ற அவரைப் பூஜிப்பாய். அவர் நம்மை விடுகிறதில்லை. ஏனெனில், அன்பு ஒருபொழுதும் கீழே இழுக்கிறதில்லை, வியாபாரம் செய்கிறதில்லை, ஸ்வயநலத்தை யறிகிறதில்லை" என்றார்.

பின்னர், அந்த, மகாத்மா உபாசிப்பது இப்படி யென்று அவனுக்கு உபதேசம் செய்தார். அந்த மனிதன் எல்லா

வற்றையும் விட்டுவிட்டு, ஆரண்யத்துக்குள் சென்றுவிட்டான். அங்கே யவன் தியானம் செய்து, தியானம் செய்து. கடைசியாகத் தன்னை மறந்துவிட்டான்; எறும்புகள் சூழ்ந்து அவனைச் சுற்றிலும் புற்றுக்கள் கட்டின; அவன் அதை கொஞ்சமும் அறியாமலே யிருந்தான்.

அநேக வருஷங்கள் சென்ற பின்னர் "ஏ,மகரிஷி! எழுந்திரு" என்று ஒரு சப்தம் கேட்டது. இப்படி எழுப்பப்பட்ட அவன், "மகரிஷியா? நான் ஒரு கொள்ளைக்காரன்!" என்றான்.

"இனிமேல் நீ கொள்ளைக்காரனில்லை; நீ ஒரு பரிசுத்த மகரிஷியாய் விட்டாய். உனதுபழைய பெயர் போய்விட்டது. ஆனால், இப்பொழுது, உன்னைச் சுற்றிலும் எறும்புப் புற்றுக்கள் நிறைந்துவிட்டபொழுதிலும் அவற்றை யறியாது உன்னுடைய தியானமானது அவ்வளவு ஆழ்ந்து அதிகமாயிருந்ததினாலே உன்னுடைய பெயர் வால்மீகி—'எறும்புப் புற்றில் பிறந்தவன்,' எனப்படும்" என்று அந்த சப்தம் மறுமொழி கூறிற்று. ஆகையால், அவன் மகரிஷியாய் விட்டான்.

அவன் கவியானது இவ்விதமாம். ஒருநாள் இந்த வால்மீகி மகரிஷி பரிசுத்த நதியாம் கங்கையிலே ஸ்நானம் செய்யச் சென்றிருந்தபொழுது ஒரு ஜதை புறாக்கள் சுற்றிச் சுற்றிப் பறந்துகொண்டும், ஒன்றை யொன்று முத்தமிட்டுக்கொண்டு மிருப்பதைப் பார்த்தார். அந்த மகரிஷி மேலே பார்த்து அந்தக் காக்ஷியைக் கண்டுசந்தோஷித்தார்; ஆனால், ஒரு விநாடி நேரத்திலேஒரு அம்பு அவர் பக்கத்திலே பறந்து சென்று ஆண் புறாவைக் கொன்றுவிட்டது. புறா கீழே

விழுந்தவுடனே, பெண்புறு விசனத்துடனே தனது தோழனுடைய பிணத்தைச் சுற்றிச் சுற்றி வந்தது.

ஒரு விநாடி நேரத்திலே அந்தக் கவி துக்க முடையவராய், திரும்பிப் பார்க்க, வேடுவனைக் கண்டார்.

"அணுவளவும் இரக்கமில்லாத நீ ஒரு பாபி. உன்னுடைய கொலைக்கை அன்பின் பொருட்டுக்கூட நில்லாது!" என்றார்.

"இது என்ன? நான் என்ன சொல்லுகிறேன்? நான் இம்மாதிரி இதற்கு முன் ஒருபொழுதும் பேசினதேயில்லையே" என்று அவர் தமக்குத்தாமே நினைத்துக்கொண்டார்.

அப்பொழுது "பயப்படாதே; உன்னுடைய வாயிலிருந்து வருகின்ற இது காவ்யமாம்; உலகின் நன்மைக்காக ராமருடைய சரித்திரத்தைக் காவ்ய பாஷையிலே எழுதுவாய்," என்று ஒரு சப்தம் கேட்டது. காவ்யம் முதலில் ஆரம்பித்தது அப்படித்தான்.

முதலாவது கவியாகிய வால்மீகியின் வாயிலிருந்து முதலாவது சுலோகம் இரக்கத்திலிருந்து கிளம்பியது. அதற்குப் பின்னர்தான், அவர் "ராமருடைய சரித்திர" மாகிற அழகிய ராமாயணத்தை அவர் எழுதினார்.

அயோத்தி என்று ஒரு பழய இந்திய நகரம் இருந்தது.—அது இக் காலங்களில்கூட இருக்கிறது. அது இன்னும் உள்ள பிரதேசம் ஔட் எனப்படுகிறது. உங்களில் அநேகர் இந்தியா படத்திலே அதைக் கவனித்திருக்கலாம். அதுதான் புராதன அயோத்தியா.

அங்கே, புராதன காலங்களிலே, தசரதன் என்று ஒரு அரசன் அரசாட்சி புரிந்துவந்தான். அவனுக்கு மூன்று

ராணிகள். ஆனால், அவ் வரசனுக்கு அவர்களில் எவர் மூல மாகவும் குழந்தை யில்லாமலிருந்தது. நல்ல ஹிந்துக்களைப் போல, அரசனும் ராணிகளும் எல்லோருமாகத் தங்களுக்குக் குழந்தைகள் உண்டாகும்படி உபவாசம் இருந்துகொண்டும் பிரார்த்தனை செய்துகொண்டும் யாத்திரை போனார்கள்; காலத்திலே, நான்கு குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் மூத்தவன் இராமன்.

இப்பொழுது, இருக்கவேண்டியதுபோல, இந்த நான்கு சகோதரர்களும் வித்தையின் எல்லாக் கலைகளிலும் நன்றாகக் கல்வி யளிக்கப்பட்டார்கள். பிற்காலத்திலே சண்டைகள் நேரிடாதிருக்கும்பொருட்டுப், புராதன இந்தியாவிலே அரசனானவன் தான் உயிருட னிருக்கும்பொழுதே தனது மூத்த புத்திரனை இளவரசனாக நியமித்துவிடுவது வழக்கம்.

இப்பொழுது ஜனகன் என்று இன்னொரு அரசன் இருந்தான்; இவ்வரசனுக்கு சீதையென்ற பெயருடன் ஒரு அழகிய புத்திரி இருந்தாள். சீதை ஒரு வயலிலே கண்டெடுக்கப்பட்டாள்; அவள் பூமியினுடைய புத்திரி, பெற்றோரில்லாமல் பிறந்தவள். இந்தியாவின் புராதன புராணக் கதைகளிலே, மனிதர்கள் பெற்றோர் இல்லாமல் பிறக்கவும், யாகாக்கினியிலிருந்து பிறக்கவும், வயலிலே பிறக்கவும், மற்றும்,—மேக மண்டலங்களிலிருந்து கீழே விழுந்ததுபோல நீங்கள் காண்பீர்கள். அவ் வெல்லாவித அற்புதமான பிறப்புக்களும் இந்தியாவின் புராணக் கதைகளிலே சாதாரணமாம்.

சீதை பூமியின் புத்திரியானதினாலே பரிசுத்தமும் அழகும் வாய்ந்திருந்தாள். அவள் ஜனகராஜனால் வளர்க்கப்பட்டாள். அவளுக்கு விவாக வயது வந்தவுடனே, அரசன் அவளுக்கேற்ற ஒரு புருஷனைத் தேட விரும்பினான்.

"ஸ்யம்வரம்" என்று முற்காலத்திலே இந்தியாவில் ஒரு வழக்கம் இருந்தது. அதன் மூலமாக, இராஜகுமாரத்திகள் புருஷனைத் தேடித் தெரிந்தெடுத்துக்கொள்வது வழக்கம். தேசத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்து அநேக ராஜகுமாரர்கள் வரவழைக்கப்பட்டார்கள். இராஜகுமாரி அழகிய உடையுடுத்தி, கையிலே ஒரு மாலையை எடுத்துக் கொண்டு, ராஜகுமாரர்கள் ஒவ்வொருவருடையவும் பிரத்தியேக யோக்கியதைகளை எடுத்துக் கூறுகின்ற ஒருவனால் பின் தொடரப்பெற்று, தன் முன்னே கூடியிருப்பவர்களின் மத்தியில் சென்று, தான் புருஷனாக வரிக்க விரும்பிய ராஜகுமாரனைப் பொறுக்கியெடுத்து, அவனுடைய கழுத்திலே அந்தப் புஷ்பமாலையைப் போடுவாள். பின்னர் அவர்கள் அதிக ஆடம்பரத்துடனும் பெருமையாகவும் விவாகம் செய்விக்கப்படுவார்கள்.

சீதையினுடைய கையைப் பிடிக்க ஆசைகொண்ட அநேக ராஜகுமாரர்கள் வந்திருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே செய்யப்பட்ட சோதனை ஹரதநு என்ற ஒரு பெரிய வில்லை ஒடிக்கவேண்டியது. இராஜகுமாரர்கள் அனைவரும் இச் செய்கையைச் செய்வதற்கு தங்கள் பலமெல்லாவற்றையும் உபயோகித்தார்கள்; ஆனால், தோற்றுவிட்டார்கள். கடைசியாக, ராமர் அப் பெரிய வில்லைத் தமது கைகளிலே எடுத்து வெகு சுலபமாக அதை இரண்டாக ஒடித்துவிட்டார். இவ்

விதமாக, சீதை தசரதராஜனுடைய புத்திரனாகிய ராமனைத் தனக்குப் புருஷனாக வரித்துக்கொண்டாள்; அவர்களுக்கு மிகுந்த சந்தோஷங்கட்கிடையில் விவாகம் நடந்தது.

பின்னர், ராமர் தமது மனைவியைத் தமது வீட்டுக்கு இட்டுச்சென்றார்; தாம் நீங்கிக்கொண்டு ராமரை இளவரசராக நியமிப்பதற்குக் காலம் வந்துவிட்டதென்று அவருடைய வயதுசென்ற தகப்பனார் கருதினார். உடனே அந்தச் சடங்குக்காக எல்லாம் தயார் செய்யப்பட்டன. தேசம் முழுதும் இந்தச் சங்கதியைக் கேட்டுக் குதுகலித்தது.

அப்பொழுது, கடைசி ராணியான, கைகேயி என்பாள் நெடுநாட்களுக்கு முன்னர் அரசனால் தனக்கு அளிக்கப்பட்ட இரண்டு வரங்களைப்பற்றித் தனது வேலைக்காரியினால் ஞாபகப்படுத்தப்பட்டாள். ஒரு சமயத்தில் அவள் அரசனுக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகும்படி செய்தாள்; அவன் அவளுக்கு இரண்டு வரங்கள் கொடுப்பதாக வாக்களித்தான். "என்னாலான எந்த இரண்டு விஷயங்களை யாவது நீ கேள், நான் அவற்றை உனக்கு அளிக்கிறேன்" என்று அவன் கூறினான். ஆனால், அவள் அப்பொழுது ஒரு வேண்டுகோளும் செய்துகொள்ளவில்லை. அவள் அதைப் பற்றி யெல்லாம் மறந்துவிட்டாள்; ஆனால், அவளிடத்தில் வேலையிலிருந்த தீயமனத்தினளாகிய வேலைக்காரி, ராமர் சிம்ஹாசனத்தில் ஏறுவதுபற்றி அவளுக்குப் பொறாமையை யுண்டுபண்ணி, அவளுடைய சொந்தப் புத்திரன் அரசனுக்குப் பின்னே பட்டங் கட்டிக்கொண்டால் எவ்வளவு நன்றா யிருக்குமென்று துர்ப்போதனை செய்தாள்.

ராணிக்கு அநேகமாகப் பொறாமைப் பைத்தியம் பிடித்துவிட்டது. பின்னர் வேலைக்காரி, அரசன் வாக்குத்தத்தம் செய்துள்ள இரண்டு வரங்களையும் கேட்கும்படி அவளுக்கு ஆலோசனை சொன்னாள். ஒன்று: தன்னுடைய சொந்த புத்திரனாகிய பரதன் சிம்ஹாசனத்தில் வைக்கப்படவேண்டும்; இன்னொன்று: ராமர் பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்வதற்குக் காட்டுக்கு அனுப்பப்படவேண்டும்.

இப்பொழுது, வயது சென்ற அந்த அரசனுக்கு ராமர் உயிராயிருந்தார்; இந்தக் கொடிய வேண்டுகோள் அவரிடம் செய்யப்பட்டவுடனே, அவர் அரசனாகையினாலே தம்முடைய வார்த்தை தவறக்கூடாதென்று உணர்ந்தார். ஆகையால், அவருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. ஆனால், ராமர் உடனே வந்து, தாம் சிம்ஹாசனத்தை மனப்பூர்வமாகத் தியாகம் செய்துவிட்டு வனவாசம் செல்வதாகவும். தமது பிதாவின் வாக்குப் பொய்க்கவேண்டாமென்றும் முன்வந்தார். அப்படியே, ராமர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் தம்மிடமிருந்து பிரியாத அன்பு மிகுந்த சகோதரன் லக்ஷ்மணனாலும் அன்பிற் சிறந்த மனைவி சீதையாலும் பின் தொடரப்பட்டு பதினான்கு வருஷம் வனவாசம் சென்றார்.

இந்தப் பெரிய காடுகளிலே வசித்து வந்தவர்கள் இன்னாரென்று ஆரியர்களுக்குத் தெரியாது. அந்தக் காலங்களிலே, காட்டு ஜனங்களை அவர்கள் "குரங்குகள்" என்றார்கள். "குரங்குகள்" எனப்பட்டவர்களிற் சிலர் அசாதாரண பலமும் சக்தியும் வாய்ந்திருந்தால், "ராக்ஷதர்கள்" எனப்பட்டார்கள்.

ஆகையால், ராக்ஷதர்களாலும் குரங்குகளாலும் வசிக்கப்பெற்ற ஆரண்யத்தினுள்ளே, ராமரும் லக்ஷ்மணரும் சீதையும் சென்றார்கள்.

சீதை ராமரைப் பின் தொடர்வதாகக் கூறியபொழுது, அவர் "ராஜ குமாரத்தியாகிய நீ கஷ்டங்களையெல்லாம் சகித்து அறியப்படா ஆபத்துக்கள் நிறைந்த காட்டினுள்ளே எப்படி என்னைப் பின்பற்றி "வருவாய்?" என்றார்.

ஆனால் சீதை "ராமர் எங்கே போகிறாரோ அங்கே சீதையும் போகிறாள். தாங்கள் என்னை 'ராஜபிறப்பு' என்றும் 'ராஜ குமாரத்தி' என்றும் எப்படிச் சொல்லலாம்? நான் உங்களுக்கு முன்னே செல்கிறேன்," என்று மறுமொழி கூறினாள்.

அப்படியே, சீதை சென்றாள். இளைய தம்பியும் கூடச் சென்றான். அவர்கள் காட்டினுள்ளே வெகு தூரம் சென்று, கடைசியாக யமுனா நதிக்கரையை அடைந்தார்கள். அந்நதியின் தீரத்திலே அவர்கள் சிறு குடிசைகள் கட்டிக்கொண்டார்கள்; ராமரும் லக்ஷ்மணரும் மான் வேட்டையாடுவதும் பழங்கள் சேகரிப்பதும் வழக்கம். அவர்கள் இவ்விதமாகக் கொஞ்சக்காலம் இருக்கவே, ஒரு நாள் அங்கே ஒரு ராக்ஷசி வந்தாள். அவள் இலங்கையின் அரசனாகிய ராக்ஷதனுடைய சகோதரி. அவள் இஷ்டப்படி காடெல்லாம் திரிந்துவிட்டு, ராமனிடம்வந்து, அவர் மிகவும் அழகுவாய்ந்தவரா யிருக்கக்கண்டு, உடனே அவரைக் காதலித்தாள்.

ஆனால், இராமர் மனுஷ்யர்களுக்குள்ளே மிகமிகப் பரிசுத்தமானவர்; தவிர, அவர் கிருகஸ்தர்; ஆகையால், அவளுடைய காதலை அவர் பிரதிபலிக்க முடியவில்லை.

'பழி வாங்கவேண்டும்' என்ற எண்ணத்துடனே அவள் தனது சகோதரனாகிய ராக்ஷத அரசனிடத்திலே சென்று ராமருடைய மனைவியாகிற அழகிய சீதையைப்பற்றி எல்லாம் சொன்னாள்.

இராமர் மனுஷ்யர்களுக்குள்ளே மிகமிகச் சக்தி வாய்ந்தவர்; அவரை ஜயிப்பதற்குப் போதிய பலமுடையவர்களாய் ராக்ஷதர்களாவது அசுரர்களாவது வேறெவருமே கிடையாது. ஆகையால், அந்த ராக்ஷஸ அரசன் தந்திரம் செய்ய வேண்டி வந்தது.

அவன் மாயாஜாலக்காரனாகிய இன்னொரு ராக்ஷதனைப் பிடித்து, அவனை யொரு அழகிய பொன்மானாக மாற்றினான். அந்த மான் இராமர் வசித்துவந்த இடத்தைச் சுற்றிச் சுற்றித் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தது.

சீதையானவள் அதனுடைய அழகைக் கண்டு மயங்கி, இராமரைப் பார்த்து அந்த மானைத் தனக்குப் பிடித்துக் கொடுக்கும்படி கேட்டாள். இராமர் சீதையைப் பார்த்துக் கொள்ளும்படி தம்முடைய சகோதரனிடத்திலே சொல்லி விட்டு அந்த மானைப் பிடிப்பதற்குக் காட்டினுள்ளே சென்றார். அப்பொழுது லக்ஷ்மணர் அந்தக் குடிசையைச் சுற்றிலும் ஒரு அக்கினி வட்டமிட்டு சீதையை நோக்கி "இன்று உனக்கு ஏதோ நேரிடும்போலிருக்கிறது. ஆகையால், இந்த மாயா வட்டத்தினின்றும் நீ வெளியே போகக்கூடாதென்று நான் கூறுகிறேன். நீ போனால், ஏதோ ஆபத்து உனக்கு நேரிடும்" என்று சொன்னார். இதற்குள்ளாக, இராமர் தமது அம்பினால் அந்த மாய மானை எய்துவிட்டார்;

உடனே அந்த மானனது ஒரு மனிதனுடைய உருவமாக மாறி மரித்துவிட்டது.

உடனே "ஏ, லக்ஷ்மணா! உதவிக்கு வா!" என்று ராமருடைய சப்தம் குடிசையிலே கேட்டது. சீதை, "லக்ஷ்மணா! இராமருக்கு உதவி செய்தற்கு உடனே காட்டுக்குப் போ!" என்றாள். "அது இராமருடைய சப்தமல்ல" என்று லக்ஷ்மணர் மறுத்துக் கூறினார். ஆனால், சீதை பலதாமும் வேண்டவே, லக்ஷ்மணர் இராமரைத் தேடிப்போகவேண்டி வந்தது. அவர் போன உடனே சந்நியாசி வேடந் தரித்திருந்த ராக்ஷத அரசன் வாசலில் வந்து பிச்சை கேட்டான். "எனது புருஷன் திரும்பிவருகிறவரையில் கொஞ்சம் பொறுத்திருங்கள்; நான் தங்களுக்கு வேண்டிய பிக்ஷை யளிப்பேன்" என்றாள் சீதை. "மாதே! நான் பொறுக்க முடியாது. நான் மிகவும் பசியுடன் இருக்கிறேன்; உன்னிடமுள்ள ஏதேனும் எனக்குக் கொடு" என்றான் அவன். இது கேட்டவுடனே, சீதை, குடிசையில் தான் வைத்திருந்த சில பழங்களை வெளியே கொண்டுவந்தாள். ஆனால், அந்த சந்நியாசிதான் பரிசுத்த புருஷனாகையினாலே அவள் பயப்படவேண்டாமென்று உறுதி கூறி, பிச்சைகொண்டுவந்து தன்னிடம் கொடுக்கும்படி அவளைப் பலவிதத்திலும் தூண்டினான். ஆகையால், சீதை அந்த மந்திரவட்டத்தை விட்டு வெளியே வந்தாள்; உடனே அந்த சந்நியாச வேஷதாரி, தனது ராக்ஷஸ சரீரத்தை யடைந்து சீதையைத் தனது தோள்களிலே தூக்கி வைத்துக்கொண்டு, தனது மாயா ரதத்தை அழைத்து, அவளை யதிலே வைத்துக்கொண்டு, அவள் அழ அழ, அவன் ஓடிவிட்டான். பாபம்! சீதை! அவள் கிஞ்சித்தும் உதவி

2

யற்றவளாயிருந்தாள். அவளுடைய உதவிக்கு வர, அங்கு எவருமில்லை. ராக்ஷதன் அவளைத் தூக்கிக்கொண்டு போகையில், அவள் தனது சரீரத்திலிருந்த ஆபரணங்களுள் சிலவற்றையெடுத்து, மத்தியில் மத்தியில் கீழே போட்டுவிட்டுப் போனாள்.

அவள் ராவணனாலே இலங்கைத் தீவாகிற அவனுடைய ராஜ்யத்துக்கு எடுத்துக்கொண்டு போகப்பட்டாள். அவன் அவளைத் தன்னுடைய ராணியாய் விடும்படியும், தன்னுடைய வேண்டுகோளுக்கிணங்கும்படியும் அநேக விதங்களில் தூண்டினான். ஆனால், பதிவிரதா தர்மமே உருவாய் வந்த சீதையானவள் அந்த ராக்ஷதனுடன் பேசக்கூடவில்லை. அவன் அவளைத் தண்டிப்பதற்காக, அவள் தன்னுடைய மனைவியாகச் சம்மதிக்கிற வரையில், பகலும் இரவும் ஒரு மரத்தின்கீழ் வசிக்கும்படி செய்தான்.

இராமரும் லக்ஷ்மணரும் குடிசைக்குத் திரும்பிவந்து அங்கே சீதை யில்லாதிருக்கக் கண்டபொழுது, அவர்கள் அடைந்த விசனத்துக்கு அளவேயில்லை. 'அவள் எங்குப்போயிருப்பாள்?' என்று அவர்களால் கற்பித்துக்கொள்ளக்கூட முடியவில்லை. இரண்டு சகோதரர்களும் எங்கெங்கும் சீதையைத் தேடிக்கொண்டு சென்றார்கள். ஆனால், அவளைப் பற்றி ஒன்றுமே யறிந்துகொள்ள முடியவில்லை. நெடுநாட்கள் தேடியபின்னர் அவர்கள் ஒரு கூட்டம் "குரங்குகளை"க் கண்டார்கள்; அவற்றின் மத்தியில் "தெய்வீகக் குரங்கு" ஆகிய ஹநுமார் இருந்தார். குரங்குகளின் அரசனாகிய ஹநுமார், இராமருக்கு மிகமிக விசுவாசமுள்ள பணியாளனாகி, நாம் பின்னால் பார்க்கப்போகிறபடி, சீதையை மீட்

டுக்கொண்டு வருவதில் அவருக்கு உதவி புரிந்தார். அவர் ஈச்வரனுக்கு உண்மையான பக்தனுடைய லக்ஷியமாக இன்னும் ஹிந்துக்களால் பூஜிக்கப்பட்டு வரும்படி, ராமரிடத்து அவர் வைத்திருந்த பக்தி அவ்வளவு பெரிதாயிருந்தது. "குரங்குகள்," "ராக்ஷதர்கள்" என்பதினாலே தென்னிந்தியாவின் பூர்வீகக் குடிகள் என்று பொருள்படுவதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

ஆகையால், கடைசியாக, ராமர் இந்தக் குரங்குகளுடனே சேர்ந்துகொண்டார். ஆகாயத்தின் வழியாக ஒரு ரதம் பறந்துபோனதை யவர்கள் கண்டதாயும், அதிலே ஒரு ராக்ஷதன் உட்கார்ந்திருந்ததாயும், மிகமிக அழகிய ஸ்திரீயொருத்தியை அவன் கொண்டுபோனதாயும், அவள் கோவென்று அழுது கொண்டிருந்ததாயும், ரதமானது தங்களுடைய தலைகளுக்கு மேலே சென்றபொழுது அவள் தங்களுடைய கவனத்தை யிழுப்பதற்கு தன்னுடைய ஆபரணங்களுள் ஒன்றைப் போட்டுவிட்டுப் போனதாயும் அவர்கள் அவரிடம் கூறினார்கள்.

லக்ஷ்மணர் அந்த நகையை யெடுத்துப் பார்த்து "இது யாருடைய நகையோ தெரியாது" என்று கூறினார். இராமர் அதை அவரிடமிருந்து எடுத்து, உடனே அதை யறிந்து கொண்டு, "ஆம், அது ஸீதையினுடையதுதான்" என்று கூறினார்.

லக்ஷ்மணர் அந்த நகையைக் கண்டுபிடிக்க முடியவில்லை; ஏனென்றால், 'சீதையினுடைய கழுத்தையும் புஜங்களையும் அவர் ஒருபொழுதும் பார்த்ததேயில்லை என்னும்படி தமயனுடைய மனைவி அவ்வளவு மரியாதையிலே

வைக்கப்பட்டிருந்தாள். அது கழுத்திலே யணியப்பட்ட ஆபரணமாயிருந்தபடியால் அது யாருடையதென்று அவ னுக்குத் தெரியாதென்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இந்தச் சரித்திரத்தில் பழய இந்திய வழக்கம் காணப்படுகிறது. அப் பொழுது இந்த ராக்ஷத அரசன் இன்னு னென்பதையும், அவன் எங்கே யிருக்கிருனென்பதையும் குரங்குகள் இராம ரிடம் சொன்னுர்கள்; பின்னர் அவர்கள் எல்லோரும் அவ னைத் தேடிச் சென்ருர்கள்.

இப்பொழுது, குரங்குகளுக்கு அரசனுகிய பலியும் அவ னுடைய தம்பியாகிய சுக்ரீவனும் ராஜ்யத்துக்காகத் தங்க ளுக்குள்ளே சண்டையிட்டுக்கொண் டிருந்தார்கள். தம்பி ராமரால் உதவி செய்யப்பட்டான்; அவன் தன்னைத் துரத்தி விட்ட பலியினிடமிருந்து ராஜ்யத்தைத் திரும்பவும் பெற் றுக்கொண்டான்; பதிலாக, அவன் ராமருக்கு உதவி செய்வ தாக வாக்களித்தான். அவர்கள், தேசம் முழுதும் தேடி ஞர்கள்; ஆனுல், சீதையைக் காண முடியவில்லை. கடைசி யாக ஹநுமார் இந்தியாவின் கரையிலிருந்து இலங்கைத் தீவை ஒரே தாண்டில் தாண்டி, அங்கு லங்கை முழுதும் ஸீதையைத் தேடிப்போனுர். ஆனுல், அவளை எங்கும் காண முடியவில்லை.

பாருங்கள், இந்த ராக்ஷத அரசன் தேவர்களையும் புரு ஷர்களையும் ஸ்திரீகளையும் உலகு முழுதையும் ஜெயித்திருந் தான்; அவன் எல்லா அழகிய ஸ்திரீகளையும் சேர்த்து, அவர் களைத் தனக்கு வைப்பாட்டிகளாக்கி வைத்துக்கொண் டான். ஆகையால், ஹநுமான், 'ஸீதை, அரண்மனையில் அவர்களுடனே இருக்க முடியாது. அவள் அத்தகைய

இடத்தில் இருப்பதைப் பார்க்கிலும் இறந்துவிடுவாள்' என்று தமக்குத்தாமே நினைத்துக்கொண்டார். ஆகையால், ஹநுமார் அவளை வேறிடத்தில் தேடுவதற்குப் போனார். கடைசியாக, அவர், வானத்திலே கீழே விழுகின்ற ஒளிமங்கிய சந்திரனைப்போல ஸீதையானவள் வெளுத்து மெலிந்து ஒரு மரத்தினடியில் இருக்கக் கண்டார்.

இப்பொழுது, ஹநுமார் ஒரு சிறிய பூச்சி வடிவமெடுத்து, மரத்தின்மேல் உட்கார்ந்து, அங்கிருந்து, ராவணனால் அனுப்பப்பட்ட ராக்ஷஸிகள் வந்து, ஸீதையைக் கீழ்ப்படியும்படி செய்வதற்குப் பயமுறுத்த எப்படி முயற்சி செய்தார்களென்பதைக் கவனித்தார். ஆனால், அவள் அந்த ராக்ஷத அரசனுடைய பெயரைக்கூடக் கேட்பதில்லை.

பின்னர், ஹநுமார் சீதையின் அருகில் வந்து தாம் எப்படி ராமருடைய தூதரானு ரென்பதையும், அவர் சீதையைக் கண்டுபிடிப்பதற்குத் தம்மை யனுப்பியிருக்கிறாரென்பதையும் அவளிடம் சொன்னார். தன்னுடைய உண்மையை ஸ்தாபித்துக்கொள்வதற்கு அடையாளமாக ராமர் தம்மிடத்திலே கொடுத்த கணையாழியைச் சீதையிடம் காண்பித்தார். இராமர் அவளுடைய இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டவுடனே அவர் படையுடனே கூடவந்து அந்த ராக்ஷதனை ஜயித்து ஸீதையை மீட்டுவிடுவா ரென்று அவர் அவளிடம் சொன்னார். ஆயினும், சீதை விரும்பினாலும் அவர் தமது தோள்களின்மீது அவளைத் தூக்கிக்கொண்டு போய்விடுவதாயும், ஒரே தாண்டில் சமுத்திரத்தைத் தாண்டி, இராமரிடம் கொண்டுபோய் விடுவதாயும் சீதையினிடம் சொன்னார்.

ஆனால், சீதை, பதிவிரதா தர்மமே உருவாக வந்தபடியால் அந்த எண்ணத்தைச் சகிக்க முடியவில்லை; தன்னுடைய புருஷனைத்தவிர, எந்த மனிதனுடைய சரீரத்தையும் தொடப் பிடிக்கவில்லை. ஆகையால், சீதை தான் இருந்த இடத்திலேயே இருந்தாள். ஆனால், அவள், இராமனிடத்துக்குக் கொண்டு செல்லும்படித் தனது கூந்தலிலிருந்து ஒரு நகையையெடுத்து அவரிடம் கொடுத்தாள்; அதனுடன் ஹநுமார் திரும்பினார்.

இராமர் ஹநுமாரைப்பற்றிச் சீதையினிட மிருந்து எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு ஒரு சைந்யம் சேர்த்து, அதைக் கூட்டிக்கொண்டு, இந்தியாவின் தக்ஷிண கோடியை நோக்கிச் சென்றார். அங்கே ராமருடைய குரங்குகள் இந்தியாவை இலங்கையுடன் சேர்க்கின்ற சேதுபந்தம் எனப்பட்ட ஒரு பெரிய பாலத்தைக் கட்டினார்கள். தண்ணீர் மிகவும் குறைந்திருக்கிறபொழுது, அங்குள்ள மண்கட்டிகளின்மீது நடந்து இந்தியாவிலிருந்து இலங்கைபோய்ச் சேர்வது இப்பொழுதும் சாத்தியமாம்.

இப்பொழுது ராமர் ஈச்வராவதாரமானார்; இல்லையேல் இவ்விஷயங்களையெல்லாம் அவரால் எப்படிச் செய்திருக்க முடியும்? ஹிந்துக்கள் அவரை ஈச்வராவதார மென்றே கூறுகிறார்கள். இந்தியாவி லுள்ளவர்கள் அவரை ஈச்வரனுடைய ஏழாவது அவதாரமென்று நம்புகிறார்கள்.

குரங்குக் கூட்டங்கள் ஒன்றாகச் சேர்ந்து பெரிய மலைகளையெல்லாம் எடுத்து, அவற்றைக் கடலிலே போட்டு, அவற்றைக் கற்களாலும் மரங்களாலும் மூடி, ஒரு பெரிய அணை கட்டினார்கள். ஒரு சிறிய அணிற்பிள்ளை மணலிலே அங்

குப் புரண்டுகொண்டும், பாலத்தை நோக்கி அங்குமிங்குமாக ஓடிக்கொண்டும் உடலை யுதறிக்கொண்டு மிருந்ததென்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதமாக அது தன்னுடைய சிறிய வழியில் இராமருடைய அணைக்கு மண்ணைப் போட்டு வேலை செய்துகொண்டிருந்தது. குரங்குகள் சிரித்தன. ஏனெனில், அவை பெரிய மலைகளையும், பெரிய காடுகளையும், பெரிய பெரிய மண்கட்டிகளையும் பாலத்துக்காகக் கொண்டுவந்துகொண்டிருந்தன. ஆகையால், மணலிலே உருண்டு, பின்னர் உதறி விடுகின்ற சிறிய அணிற்பிள்ளையின் செய்கையைப் பார்த்து அவைகள் சிறித்தன. ஆனால், ராமர் பார்த்து, "சிறிய அணில் ஆசீர்வதிக்கப்படுவதாக; அது தன்னாலானவரையில் தன்னுடைய வேலையைச் செய்கிறது; ஆகையால், உங்களில் மிகமிகச் சிறந்தோரைப்போல, அதுவும் மிகமிகச் சிறந்ததே" என்றார். பின்னர் அவர் அந்த அணிற்பிள்ளையை மெதுவாக முதுகிலே தடவிக் கொடுத்தார். நீளமாகப் போடப்பட்டிருக்கிற ராமருடைய விரல்களின் குறிகள் இன்றும் அணிற்பிள்ளையின் முதுகில் காணப்படுகின்றன.

இப்பொழுது, பாலம்கட்டி முடிந்தவுடனே, ராமராலும் அவருடைய தம்பியாலும் நடத்தப்பெற்ற குரங்குகளின் சைந்யம் முழுதும் இலங்கைக்குள் நுழைந்தன. பின்னர் அநேக மாதங்கள் வரையில் பிரமாதமான யுத்தமும் ரத்தப் பெருக்கும் ஏற்பட்டன. கடைசியாக, இந்த ராக்ஷச அரசனாகிய ராவணன் ஜயிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். அவனுடைய ராஜதானி நகரமானது, முழுதும் கெட்டிப் பொன்னாலாக்கப்பட்ட அரண்மனைகளுடனும்

மற்றும் எல்லாவற்றுடனும் பிடிக்கப்பட்டது. இந்தியாவின் உள்நாட்டுப் பிரதேசங்களிலே தூரத்திலேயுள்ள கிராமங்களிலே, நான் லங்கைக்குப் போயிருந்தேனென்று கூறினால், சாதாரண ஜனங்கள், நமது கிரந்தங்கள் கூறுகின்றபடி, "அங்கே வீடுகள் பொன்னுலாக்கப்பெற்றவையாமே" என்று சொல்கிறார்கள். ஆகையால், இந்தப் பொன் நகரங்களெல்லாம் இராமர் வசமாயின; அவர் அவற்றை ராவணனுடைய தம்பியாகிய விபீஷணனுக்குக் கொடுத்து,யுத்த காலத்திலே ராமருக்கு அவன் செய்த விலையுயர்ந்த உதவிக்குப் பதிலாக அவனுடைய சகோதரனுடைய இடத்திலேயே அவனைச் சிம்ஹாசனத்தில் ஏற்றிவைத்தார்.

பின்னர், ராமர் ஸீதையையும் மற்றவர்களையும் கூட்டிக்கொண்டு இலங்கையை விட்டுப் புறப்பட்டார். வனவாச காலம் தீர்ந்த பிற்பாடு இளையவனாகிய பரதன் வந்து, தகப்பனாருடைய மரணத்தை ராமருக்குத் தெரிவித்து, அவர் சிம்மாசனமேறி அரசராக வேண்டுமென்று பிடிவாதமாக வற்புறுத்தினன். இராமருடைய வனவாசகாலத்திலே, பரதன் சிம்மாசனம் ஏறச் சம்மதிக்கவேயில்லை; மரியாதையினால், ராமருடைய பாதரக்ஷைகளை அவருக்குப் பதிலாகச் சிம்மாசனத்தில் வைத்திருந்தான். பின்னர் இராமர் தமது ராஜதானி நகரத்துக்குத் திரும்பிவந்தார்; தமது ஜனங்களுடைய பொது சம்மதத்தின்பேரில், அவர் அயோத்திக்கு அரசனானார்.

கொஞ்சக்காலம் கழித்து, அவருடைய ஜனங்களுக்குள்ளே ஒரு முணுமுணுப்பு உண்டாயிற்று. "பரீக்ஷிக்க வேண்டும்! பரீக்ஷிக்கவேண்டும்! ஸீதை ராவணனுடைய வீட்

டிலே யிருந்தபொழுது பரிசுத்தமாயிருந்தாள் என்பதை ஸீதை ருசுப்பிக்கவேண்டும்!'' என்று ஜனங்கள் கூவினார்கள்.

"பரிசுத்தம்! ஸீதை பதிவிரதாதர்மமேயுரு" என்றார் இராமர்.

"பாதகமில்லை; அவள் பரிசோதிக்கப்படவேண்டும்" என்று வற்புறுத்தினார்கள் ஜனங்கள்.

பின்னர் ஒரு பெரிய யாகாக்கினி தயாராக்கப்பட்டது; அதில் ஸீதை விழுந்துவிட வேண்டியிருந்தது. ஸீதை போய் விடுவாளே யென்று இராமர் துக்காக்கிராந்தராயிருந்தார்.

ஆனால், ஒரு விநாடி நேரத்திலே அக்கினிபகவான் தமது சிரசிலே ஒரு சிம்மாசனத்துடனே தோன்றினார்; அந்த சிம்மாசனத்தின்மீது ஸீதை வீற்றிருந்தாள். பின்னர், ராஜ்யம் முழுதும் ஆநந்தக் கொந்தளிப்பா யிருந்தது; எல்லோரும் திருப்தி யடைந்தனர்.

இராமர் தமது ராஜ்யத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்ட பின்னர், அவர், முற்காலங்களிலே அரசன் தன்னுடைய ஜனங்களுடைய நன்மைக்காக எடுக்கவேண்டிய அவசியமான விரதங்களையெல்லாம் அனுஷ்டித்தார். அரசன் தன்னுடைய ஜனங்களுடைய அடிமையாயிருந்தான்; நாம் இனிமேல் பார்க்கப்போகிறபடி அவன் பொதுஜன அபிப்பிராயத்துக்குத்தலைவணங்கவேண்டியவனாயிருந்தான். ராமர் ஸீதையுடனே கூட சில வருஷங்கள் சுகமாகக் கழித்தார்.

"ஸீதை ஒரு ராக்ஷதனால் திருடப்பட்டு சமுத்திரத்துக் கப்பால் கொண்டுபோகப்பட்டவள்தானே" என்று ஜனங்கள் மறுபடியும் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள்.

அவர்கள் முன்செய்த சோதனையில் திருப்தியடையாது, இன்னொரு சோதனையை விரும்பினார்கள்; "இல்லையேல் அவளைத் தேசத்தினின்றும் நீக்கிவிடவேண்டும்" என்று கூறினார்கள்.

ஜனங்களுடைய வேண்டுகோளைத் திருப்தி செய்வதற்காக, ஸீதை தேசத்தினின்றும் நீக்கப்பட்டு, காட்டிலே வசிக்கும்படி விடப்பட்டாள். அங்கே கவியும் மகரிஷியுமாகிய ஸ்ரீவால்மீகியினுடைய ஆச்ரமம் இருந்தது. அந்த மகரிஷி, உதவியற்று அழுதுகொண்டிருக்கும் ஸீதையைக் கண்டு, அவளுடைய விசனகரமான கதையைக் கேட்டுத் தம்முடைய ஆச்ரமத்திலே அவளுக்கு ஆதரவு கொடுத்தார்.

அவள் சீக்கிரம் பிரசவிக்கும்படியான ஸ்திதியில் இருந்தாள். அவள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். அக் குழந்தைகள் இன்னாரென்று அக் குழந்தைகளிடம் அந்தக் கவி யொருபொழுதும் சொன்னதில்லை. அவர் அவர்களை பிரஹ்மச்சாரி வாழ்க்கையில் வளர்த்துவந்தார். பின்னர் அவர் ராமாயணம் என்ற காவ்யத்தைச் செய்தார்; சங்கீதத்துடனே சேர்த்து அதை நாடகமாக்கினார்.

இந்தியாவிலே, நாடகமானது ஒரு பரிசுத்த விஷயம். நாடகமும் சங்கீதமுமே மதமாகக் கருதப்படுகின்றன. எந்தப் பாட்டும் அது காதல் பாட்டாயினும் சரி, வேறாயினும் சரி—ஒருவனுடைய ஆத்மா முழுதும் அப் பாட்டில் லயிக்குமானால், அவன் மோக்ஷமடைகிறான்; அவன் செய்ய வேண்டியது வேறொன்றுமே யில்லை பிரஹ்மநிஷ்டையினால் எந்த லக்ஷியத்தை யடையலாமோ அதே லக்ஷியத்தினிடம் அது இட்டுச் செல்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஆகையினால், வால்மீகி "ராமசரித" த்தை நாடகமாக்கி, ராமருடைய குழந்தைகள் இரண்டுக்கும் அதைப் பாடம் பண்ணிப் பாடும்படி போதித்தார்.

பழய காலத்து அரசர்கள் கொண்டாடும் வழக்கம் போல, ராமர் ஒரு பெரிய யக்ஞம் செய்யவேண்டிய காலம் வந்தது. ஆனால், இந்தியாவில் எந்தக் கர்மமும் கிருகஸ்தனால் தன்னுடைய மனைவியின்றிச் செய்யப்படக் கூடாது; ஸகதர்மிணியாகிய மனைவியை அவன் தன்னுடன் வைத்துக் கொள்ளவேண்டும். ஹிந்து கிருகஸ்தன் நூற்றுக்கணக்கான கர்மங்கள் செய்யவேண்டியவனா யிருக்கிறான்; ஆனால், அதிலே தன்னுடைய பாகத்தையும் சேர்த்துப் பூர்த்தி பண்ணுவதற்கு மனைவி யில்லாவிட்டால், சாஸ்திரங்களின் பிரகாரம் எக் கர்மமும் செய்யப்பட முடியாது.

இப்பொழுது, ராமருடைய மனைவி அப்பொழுது அவருடன் இல்லை. ஆகையால், ஜனங்கள் அவரை மறுபடியும் விவாகம் செய்துகொள்ளும்படி சொன்னார்கள்.

ஆனால், இராமர் தமது ஜீவிதத்தில் முதலாவது தடவையாக இந்த வேண்டுகோள் விஷயத்திலே ஜனங்களை எதிர்த்து நின்றார். அவர் "இது முடியாது; என்னுடைய உயிர் ஸீதையினுடையது" என்றார்.

ஆகையால், அதற்குப் பிரதியாக, ஸீதையைப்போன்று தங்கத்தினால் பிரதிமை யொன்று செய்யப்பட்டது, அச் சடங்கு நிறைவேறும் பொருட்டு. இப் பெரிய கொண்டாட்ட சமயத்திலே மத உணர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக அவர்கள் ஒரு நாடகமும் ஏற்பாடு பண்ணினார்கள்.

வால்மீகி மகரிஷி, ராமருடைய குழந்தைகளென்று எவருக்கும் தெரியாத லவன், குசன் ஆகிய இரண்டு சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார். ஒரு மேடை போடப்பட்டது; நாடகத்துக்கு எல்லாம் தயாராய்விட்டது. இராமரும் அவருடைய சகோதரர்களும் எல்லாப் பிரபுக்களாலும் ஜனங்களாலும் சூழப்பெற்று, பெருங்கூட்டமாய்க் கூடியிருந்தார்கள். வால்மீகியினுடைய சொற்படி, ராமருடைய சரித்திரமானது லவனாலும் குசனாலும் பாடப்பட்டது; இவ்விருவரும் தங்களுடைய ரம்மியமான குரலினாலும் தோற்றத்தினாலும் சபை முழுதும் பிரமிக்கும்படி செய்துவிட்டார்கள்.

பாபம்! இராமர் அநேகமாகப் பைத்தியம் பிடித்தவர் போல் ஆய்விட்டார். நாடகத்திலே ஸீதையின் தேசப் பிரஷ்டக்காக்ஷி வந்தபொழுது, அவருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. அப்பொழுது அந்த மகரிஷி அவரை நோக்கி, "விசனப்படாதே; நான் ஸீதையை உனக்குக் காண்பிக்கிறேன்" என்றார்.

பின்னர் ஸீதை மேடைக்குக் கொண்டுவரப்பட்டாள். ராமர் முன்னே சென்று தமது மனைவியை அணைத்துக் கட்டிக்கொண்டார்.

திடீரென்று "பரிசோதனை! பரிசோதனை!!" என்று பழய முணுமுணுப்புக் கிளம்பிற்று.

பாபம்! ஸீதையானவள் தன்னுடைய கீர்த்தியின்மீது அடிக்கடி ஏற்படும் அபவாதத்தினால் பயங்கரமாகப் பீடிக்கப்பட்டு, அவளால் பொறுக்க முடியாதபடி யாய்விட்டது. அவள் தனது குற்றமின்மையை நிரூபிப்பதற்காகத் தேவர்

கனை வேண்டிக்கொண்டாள்; பூமாதேவி திறந்துகொடுத்தாள். ஸீதை "இதோ பரிசோதனை," என்று கூவிவிட்டு, பூமியினுள்ளே மறைந்துவிட்டாள்.

இந்தப் பரிதாபகரமான முடிவைப் பார்த்து ஜனங்கள் ஆச்சரிய மடைந்தார்கள். இராமர் விசனத்தில் மூழ்கியவரானார்.

ஸீதை மறைந்து ஒரு சில நாட்களுக்குப் பின்னர் தேவர்களிடமிருந்து ஒரு தூதன் ராமரிடம் வந்து, பூமியிலே அவருடைய காரியம் முடிந்துவிட்டதென்றும், திரும்பி தேவலோகம் வந்துவிட வேண்டுமென்றும் கூறினான். இந்த சமாசாரங்கள் அவருடைய உண்மை நிலையை அவருக்கு உணர்த்தின. அவர் தமது ராஜதானியைச் சுற்றிச் சென்ற மகா நதியாகிய சாயூவில் மூழ்கி, மறு உலகத்திலே ஸீதையுடனே சேர்ந்துகொண்டார்.

இதுதான் இந்தியாவின் பெரிய, புராதன காவியம். இராமரும் ஸீதையும் இந்திய ஜன சமூகத்தின் லக்ஷியங்களாம். குழந்தைகளெல்லோரும், முக்கியமாகப் பெண்கள், ஸீதையை பூஜிக்கிறார்கள். ஒரு ஸ்திரீயினுடைய ஆசையெல்லாம் 'பரிசுத்தமான, பக்தியுள்ள, சர்வ துக்கங்களையும் சகித்த ஸீதையைப்போன்றிருக்கவேண்டும்' என்பதேயாம்.

நீங்கள் இவர்களைப்பற்றி யாராய்கிறபொழுது, இந்தியாவினுடைய லக்ஷியம் மேனாட்டு லக்ஷியத்துக்கு எவ்வளவு வேறுபட்டிருக்கிறதென்பதை நீங்கள் உடனே கண்டுபிடித்துக் கொள்ளக்கூடும். ஜாதிக்கே ஸீதை கஷ்டத்தின் லக்ஷியமாக நிற்கிறாள்.

மேனாடு: "செய், உன்னுடைய சக்தியைச் செய்தலினால் காண்பி" என்று கூறுகிறது.

இந்தியா: "கஷ்டப்படுதலினால் உனது சக்தியைக் காண்பி" என்று கூறுகிறது.

மேனாடு: ஒருவன் எவ்வளவு அதிகமாக உடைத்தாயிருக்கமுடியு மென்னும் கேள்விக்கு விடை கொடுத்திருக்கிறது; ஒரு மனிதன் எவ்வளவு கொஞ்சமாய் உடைத்தாயிருக்கமுடியும் என்னும் கேள்விக்கு விடைகொடுத்திருக்கிறது.

ஸீதை இந்தியாவுக்கு அறிகுறியாவள்—இந்தியாவின் லக்ஷியமாம்.

இரண்டு முனைகளை நீங்கள் பார்க்கிறீர்கள். அவள் இருந்தாளா, இந்தக் கதைசரித்திரமா, அல்லவா என்பதன்று கேள்வி. அங்கே லக்ஷியமிருக்கிறதென்பதை நாம் அறிகிறோம். ஸீதையாகிற இந்த லக்ஷியம் போன்று ஜனசமூகத்தினுள்ளே அவ்வளவு ஊடுருவியுள்ளதும், அதனுடைய வாழ்க்கையிலே அவ்வளவு நுழைந்துள்ளதும், ஜாதியின் மதத்திலே ஒவ்வொரு துளியிலும் கலந்துள்ளதுமான வேறு புராணக்கதை யில்லவே யில்லை. நன்மையும் பரிசுத்தமும் பவித்திரமுமான ஒவ்வொன்றுக்கும் இந்தியாவிலே ஸீதையென்றே பெயர்; ஸ்திரீயினிடத்தில் உள்ள ஸ்திரீத்தன்மையாகிய ஒவ்வொன்றுக்கும் ஸீதையென்றே பெயர்.

ஒரு வைதிகர் ஒரு ஸ்திரீயை ஆசீர்வதிக்கவேண்டுமானால், அவர் "ஸீதையாயிரு" என்று கூறுகிறார். அவர், ஒரு குழந்தையை ஆசீர்வதித்தால், அவர், "ஸீதையாயிரு"

என்று கூறுகிறார். அவர்களெல்லோரும் ஸீதையினுடைய குழந்தைகள்,—பொறுமையுள்ள, சர்வசகன, என்றும் விசுவாசமுள்ள, என்றும் பரிசுத்தமான மனைவியாகிய ஸீதையாக அரும்பாடு படுகிறார்கள். அவள் அனுபவிக்கின்ற இவ்வெல்லாத் துக்கத்தினூடும், ராமருக்கு விரோதமாகக் கடுமையான வார்த்தையொன்றுகூட இல்லை. அவள் அதைத் தனது சொந்தக் கடமையாகக் கருதி, அதிலே தனது பங்கைச் செய்கிறாள். காட்டுக்கு அவளைத் தேசப்பிரஷ்டம் செய்து அனுப்பப்பட்ட பயங்கரமான அநியாயத்தை நினைத்துப் பாருங்கள்! ஆனால், ஸீதை வெறுப்பை அறியாள்! மறுபடியும், அது இந்திய லக்ஷியமாம்.

பூர்வீக புத்தர் கூறுகிறார்:—“ஒரு மனிதன் உனக்குத் துன்புறுத்துகிறபொழுது, அது முதலாவது துன்பத்தை சொஸ்தப்படுத்தியதாகாது; அது உலகிலே இன்னுமொரு கொடுமையையே உண்டுபண்ணும்.” ஸீதை இயற்கையிலேயே ஓர் உண்மை இந்தியனாயிருந்தாள். அவள் ஒருபொழுதும் துன்பத்துக்குப் பதில் செய்கிறதில்லை.

எது உண்மையான லக்ஷ்யம் என்பதை எவர் அறிவார்? மேனாட்டில் கருதப்பட்டபடி, வெளியே தோன்றுகின்ற சக்தியும் பலமுமா?—அல்லது, கீழ்நாட்டிலே துக்கத்தைச் சகிக்கும் தைர்யமா?

மேனாடு கூறுகிறது: “நாம் தீமையை ஜயித்து அதைக் குறைத்துவிடுகிறோம்.”

இந்தியா கூறுகிறது: “நாம் கஷ்டப்பட்டுத் தீமையை அழிக்கின்றோம்; கடைசியாகத் தீமை நமக்கு ஒன்றுமே

இல்லாமற் போய்விடுகிறது; அது நமக்கு உடன்பட்டு ஆநந்தமேயாய்விடுகிறது.

நல்லது, இரண்டும் பெரிய லக்ஷியங்களேயாம். கடைசியில் எது எஞ்சி நெடுநாளிருக்குமென்பதை எவர் அறிவார்? எந்த நோக்கம் உண்மையில் மனுஷ்ய வர்க்கத்துக்குப் பெரு நன்மையைச் செய்யும் என்பதை எவர் அறிவார்? மிருகத்துவத்தை எது ஜயிக்குமென்பதை எவர் அறிவார்? அது கஷ்டப்படுதலா? அல்லது செய்தலா?

இதற்குள்ளே, நாம் ஒருவர் மற்றவருடைய லக்ஷியங்களை அழிக்க முயற்சி செய்யாதிருப்போமாக. 'தீமையை அழிக்கவேண்டும்' என்ற ஒரே வேலையில் நாம் கண்ணாயிருக்கிறோம். நீங்கள் உங்களுடைய உபாயத்தை யநுசரியுங்கள்; நாங்கள் எங்களுடைய உபாயத்தை யநுசரிப்போம். நாம் லக்ஷியத்தை அழிக்காதிருப்போமாக. நான் மேனாட்டினரை நோக்கி "எங்களுடைய உபாயத்தை யநுசரியுங்கள்" என்று கூறுகிறதில்லை, நிச்சயமாக இல்லை. லக்ஷியம் ஒன்றே; ஆனால், உபாயங்கள் ஒருபொழுதும் ஒன்றாயிருக்க முடியாது. ஆகையினால், இந்தியாவின் லக்ஷியங்களைப்பற்றிக் கேட்டபின்னர், நீங்களும் இந்தியாவைநோக்கி அதேமாதிரி "லக்ஷியம் நம்மிருவருக்கும் சரியாயுள்ளது என்பதை நாங்கள் அறிகிறோம். நீங்கள் உங்களுடைய லக்ஷியத்தைப் பின்பற்றுங்கள், நீங்கள் உங்களுடைய சொந்த வழியில் உங்களுடைய உபாயத்தைப் பின்பற்றுங்கள், கடவுள் உங்களுக்குக் கிருபை புரிவாராக!" என்று கூறுவீர்களென்று நம்புகிறேன்.

எனது ஜீவிதத்திலே நான் செய்யக் கருதும் காரியமாவது, வெவ்வேறு லக்ஷியங்களைப்பற்றிச் சண்டைபோடா

திருக்கும்படி கீழ்நாட்டினரையும் மேனாட்டினரையும் கேட்டுக்கொள்வதுமன்றி, எவ்வளவு எதிரிடையாகத் தோன்றினாலும் இரு சந்தர்ப்பங்களிலும் லக்ஷியம் ஒன்றேயென்று அவர்களுக்கு நிரூபிப்பதுமாம். இந்தக் குழப்பமான வாழ்க்கை நிலத்தினூடே, நாம் ஒருவருக்கொருவர் "கடவுள் அநுக்கிரகிப்பார்" என்று கூறிக்கொள்வோம்.

இராமாயண ரகசியம் முற்றிற்று.

அநேக நாளாய் எதிர்பார்த்த நூல்?

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

மோக்ஷசாதன ரஹஸ்யம்

இந்நூலாசிரியர் ஸ்ரீயுத சுப்பிரமண்யசிவம் 2-முறைச் சிறைச்சாலையிலிருந்து 12-1-1922-ல் விடுதலையடைந்து இந்நூலை எழுதினர். இந்நூலில் ஐந்துவித யோகாநுபவங்களைத் தாம் குருநாதர் மூலமாக அறிந்த அநுபவப்படியே கர்மயோகத்தில் 168 - விஷயங்களும், பக்தியோகத்தில் 148 - விஷயங்களும், ஹடயோகத்தில் 109 - விஷயங்களும், ராஜயோகத்தில் 67-விஷயங்களும், ஞானயோகத்தில் 165-விஷயங்களுமாகப் பிரித்து எளிய வசன நடையில் இந்நூலை இயற்றியிருப்பதால் இது ஒவ்வொரு தமிழ் சகோதர சகோதரிகளும் எளிதில் வாசிகக்கூடிய நூல் இதுகாறும் இம்மாதிரியான யோக நூல் தமிழ் உலகில் வெளிவரவில்லை. சிவம் ஆப்டோன் படத்துடன் உயர்ந்த காலிக்கோ பயிண்டுடன் விலை ரூபாய் 4. உயர்ந்த காகிதத்தில் அச்சிட்டது. விலை ரூபாய் 5.

விலாசம்.—சாதுரத்ன சற்குரு புத்தகசாலை,
4-34, நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க்டவுன் (P.O.) சென்னை.

ஓம்

ஸ்ரீ ராமகிருஷ்ணாயநம:

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

உபந்நியாசங்களான

மகாபாரத ரகசியம்

[இஃது ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரால் அமெரிக்காவில், பஸதேனு என்னும் ஊரில், ஷேக்ஸ்பியர் சங்கத்தின் ஆதரவில் செய்யப்பட்ட ஒரு பிரசங்கம்.]

இன்று மாலையில் நான் உங்களுக்குச் சொல்லப்போகின்ற மற்றப் புராணமாவது மகாபாரதம் எனப்படும். அதில் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் புத்திரனாகிய 'பரதன்' என்னும் அரசனுடைய சந்ததியாரைப்பற்றிய கதை அடங்கியிருக்கிறது.

'மகா' என்றால் 'பெரிய' என்று பொருள்; 'பாரத' என்றால் 'பரதனுடைய சந்ததியார்' என்று பொருள்; அவனால் தான் இந்தியாவுக்குப் பாரதம் என்று பெயர் உண்டாயிற்று.

இந்தப் புராணம் நடந்த இடம் குருக்க (கௌரவர்க)ளுடைய புராதன ராஜ்யமாகும்; (இந்தக்) கதையானது குருக்க (கௌரவர்க)ளுக்கும் பாஞ்சாலர்களுக்கும் நடந்த பெரிய யுத்தத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆகையால், யுத்தம் நடந்த இடம் மிகவும் பெரிதன்று.

இந்தப் புராணம் இந்தியாவில் மிகமிக ஜனவியாபகமானது; ஹோமருடைய காவ்யங்கள் கிரேக்கர்களுக்குள்

எவ்வளவு செல்வாக்குப் பொருந்தியதோ, அவ்வளவு செல்வாக்கை இது இந்தியாவில் உடைத்தாயிருக்கிறது. காலம் ஆக ஆக, மேலும் விஷயங்கள் சேர்க்கப்பட்டு, (இப்பொழுது) ஏறக்குறைய லக்ஷம் இரண்டடிகள் அடங்கிய ஒரு பெரிய புத்தகமாகிவிட்டது. எல்லாவிதக் கதைகளும், கட்டுப்பாட்டான விஷயங்களும், நம்பமுடியாத சங்கதிகளும், தத்துவ ஞான வியாசங்களும், சரித்திரத் துணுக்கைகளும் அவ்வப்பொழுது இதனுடன் சேர்க்கப்பட்டு, இப்பொழுது அது ஒரு பெரிய, பிரமாண்டமான விஷயக்குவியலாயிருக்கிறது; இவற்றினூடெல்லாம் பழய, முதல் கதை செல்கின்றது.

மகாபாரதத்தின் மத்திய கதையாவது, இந்தியாவின் சக்கிராதிபத்தியத்துக்காகப் பங்காளிகளாகிய இரண்டு குடும்பங்களுக்குள் நடந்த யுத்தத்தைப்பற்றியதாகும்; ஒரு குடும்பம் கௌரவர்கள் எனப்பட்டது; மற்றது பாண்டவர்கள் எனப்பட்டது.

ஆர்யர்கள் இந்தியாவுக்குள் சிறு கூட்டங்களாக வந்தார்கள். வரவர, இந்த ஜாதியார் வியாபிக்க ஆரம்பித்து, கடைசியாக இந்தியாவுக்கு அவர்கள் இணையற்ற அரசர்களானார்கள். பின்னர், ஆதிபத்தியத்தை யடைவதற்காக ஒரே குடும்பத்தில் இரண்டு பிரிவுகளுக்குள் நடந்த இந்த யுத்தம் நடந்தது. ஒன்றுக்கொன்று எதிரிடையாக அணி வகுக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த யுத்தகளத்தை வர்ணித்துக்கொண்டு இந்தப்புத்தகம் ஆரம்பிக்கின்ற விதத்தைஉங்களில் கீதையைப் படித்திருக்கிறவர்கள் அறிவார்கள். அது தான் மகாபாரத யுத்தம்.

(ஒரு) சக்கரவர்த்தியின் புத்திரர்களாக இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவனுக்குத் திரிதராஷ்டிரன் என்று பெயர்; மற்றவனுக்குப் பெயர் பாண்டு.

மூத்தவனாகிய திரிதராஷ்டிரன் பிறவிக் குருடன். இந்திய சட்டப்படி குருடன், நடையேயில்லாதவன், நொண்டி, க்ஷயரோகி, அல்லது வேறு தீராத வியாதி பிடித்தவன், இவர்கள் (பிதிரார்ஜ்ஜித சொத்தை) யடைய முடியாது. இவர்கள் ஜீவனும்சம் மாத்திரம் அடைய முடியும். ஆகையால், திரிதராஷ்டிரன் மூத்தவனாயிருந்தும் சிம்ஹாசனம் ஏற முடியவில்லை; பாண்டு சக்கரவர்த்தியாயினன்.

திரிதராஷ்டிரனுக்கு நூறு புத்திரர்கள்; பாண்டுவுக்கு ஐந்து புத்திரர்களே. பாண்டு பால்ய வயதில் இறந்துவிட்ட பிறகு திரிதராஷ்டிரன் குருக்க (கௌரவர்க)ளுக்கு அரசனாகித் தனது குழந்தைகளுடன்கூட, பாண்டுவின் புத்திரர்களையும் வளர்த்துவந்தான். அவர்கள் 'பெரியவர்களானவுடன், மேன்மை பெற்ற பிராஹ்மண - க்ஷத்திரியராகிய துரோணரின்கீழ்ப் படிக்க வைக்கப்பட்டு, அரசர்களுக்கு ஏற்ற பலவித யுத்த வித்தைகளிலும் கலைகளிலும் நல்ல தேர்ச்சி யடைந்தவர்களானார்கள்.

(இந்த) இளவரசர்களுடைய கல்வி முடிந்தவுடன், திரிதராஷ்டிரன் பாண்டுவின் புத்திரர்களுக்குள் மூத்தவனாகிய யுதிஷ்டிரனை அவனுடைய பிதாவின் சிம்ஹாசனத்திலேற்றிவைத்தான். யுதிஷ்டிரனுடைய அற்புதமான நற்குணங்களும் அவனுடைய மற்ற சகோதரர்களின் பராக்கிரமமும் சிரத்தையும் குருட்டரசனுடைய புத்திரர்களுடைய ஹிருதயங்களில் பொறாமையைக் கிளப்பிவிட்டன.

இவர்களுக்குள் மூத்தவனாகிய துர்யோதனனுடைய தூண்டுதலின்பேரில் வாரணாவதத்தில் நடந்த ஒரு திருவிழாவை உத்தேசித்து ஐந்து பாண்டவச் சகோதரர்களும் அங்கு வரும்படி செய்யப்பட்டார்கள். அங்கே அவர்கள்: சணல், மெழுக்கு, அரக்கு, இன்னும் வேறு சட்டென்று தீப்பிடிக்கத்தகுந்தபொருள்கள் இவற்றால் ஆக்கப்பட்டஒரு அரண்மனையில் துர்யோதனனுடைய உத்தரவுப்படி தங்கும்படி செய்யப்பட்டார்கள். ஆனால், திரிதராஷ்டிரனுடைய ஒன்றுவிட்ட சகோதரனாகிய விதுர னென்ற நல்லோன் துர்யோதனனுடையவும் அவனுடைய கட்சியாருடையவும் தீய எண்ணங்களைத் தெரிந்துகொண்டு, பாண்டவர்களிடம் அந்தச்,சதியாலோசனையைச் சொல்லி, எச்சரிக்கை செய்துவிட்டார்; அவர்கள் எவருக்கும் தெரியாமல் தப்பித்து ஓடிவிட்டார்கள்.

குருக்(கௌரவர்)கள் வீடு சாம்பலாக்கப்பட் டிருந்ததைக் கண்டு, தங்கள் வழியிலிருந்த இடையூறுகளெல்லாம் இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டன என்று நினைத்து, வருத்தம் நீங்கிச் சந்தோஷித்தார்கள். பின்னர், ராஜ்ஜியம் திரிதராஷ்டினுடைய புத்திரர்கள் வசம் ஆயிற்று.

ஐந்து பாண்டவச் சகோதரர்களும் தங்கள் தாயார் குந்தியுடன் காட்டுக்கு ஓடிவிட்டார்கள். அங்கு அவர்கள் பிராஹ்மண மாணவர்கள்போன்ற வேஷத்துடன் சஞ்சரித்துக்கொண்டு, பிச்சையெடுத்துப் பிழைத்துவந்தார்கள். அந்த வனாந்தரங்களில் அவர்கள் அநுபவித்த கஷ்டங்களும் துணிகரச் செயல்களும் அநேகம்; ஆனால், அவர்களுடைய மனோதிடமும் பலமும் பாராக்கிரமும் எல்லா அபாயங்களை

யும் ஜயிக்கும்படி செய்தன.' ஒரு அடுத்த தேசத்து ராஜ குமாரிக்குச் சீக்கிரம் விவாகம் ஆகப்போகிறது என்பதை யவர்கள் கேட்கும்வரையில்,இப்படியே யிருந்துவந்தார்கள்.

நேற்றிரவு நான் உங்களுக்குப் பூர்வீககாலத்தில் இந்திய விவாகம் நடந்துவந்த விசேஷமாதிரியைப்பற்றிக் கூறினேன். அது ஸ்வயம்வரம்; அதாவது, ராஜகுமாரி புருஷனைத் தெரிந்தெடுத்தல் எனப்பட்டது. கட்டியக்காரர்களும் ஸ்தோத்திரீகர்களும் பின்தொடர, அவள் தனது கையிலே ஒருபுஷ்பமாலையைஎடுத்துக்கொண்டு அணுகுவாள். அவனை நாடி வந்திருக்கும் ஒவ்வொருவனுடையவும் ஸிம்ஹாசனத்தருகில் அவனவனுடைய கட்டியக்காரர்களால் அந்த அரசனைப்பற்றி ஸ்தோத்திரமாக அவன் யுத்தத்திலே செய்துள்ள பெருஞ் செயல்களெல்லாம் சொல்லப்படும். இராஜகுமாரி எந்த அரசனையாவது தான் புருஷனாக வரிக்கத் தீர்மானித்துக்கொண்டுவிட்டால், அவள் அந்த விவாகமாலையை அவனுடைய கழுத்திலே போட்டுக், கருத்தைத் தெரிவிப்பாள். பின்னர் இந்தச் சடங்கு விவாக வைபவமாக மாறும்.

துருபதன் என்ற ராஜன் ஒரு பெரிய அரசன், பாஞ்சாலர்களுடைய அரசன். அவனுடைய புத்திரி திரௌபதை—அழகுக்கும் சமர்த்துக்கும் உலகெங்கும் பெயர் பெற்றவள்—ஒரு வீரனை (புருடனாக)த்தெரிந்தெடுப்பதற்கு இருந்தாள்.

ஸ்வயம்வர சமயத்திலே வில்வித்தைப் பந்தயம், அல்லது அதுபோன்ற ஏதாவது உண்டு. இந்தச் சமயத்திலே, மீன் வடிவத்திலே ஒரு குறியானது உயர ஆகாயத்திலே

வைக்கப்பட்டது. அந்த மீனுக்கடியில் மத்தியில் ஒரு துவா ரத்துடன் ஒரு சக்கரம் இருந்தது; அது இடைவிடாது சுற் றிக்கொண்டே யிருந்தது; கீழே ஒரு தொட்டியில் தண் ணீர் இருந்தது; மனிதன் தொட்டியில் உள்ள தண்ணீரில் மீனுடைய பிரதிபிம்பத்தைப் பார்த்துக்கொண்டே அந்த சக்கரத்தினூடே அம்பெய்து மீனுடைய கண்ணைப்பார்த்து அடிக்கும்படி சொல்லப்பட்டான்; எவன் ஜயித்தானே அவன் அந்த ராஜகுமாரிக்கு விவாகம் செய்துகொடுக்கப் படுவான். இப்பொழுது இந்தியாவின் வெவ்வேறு பாகங் களிலிருந்து அரசர்களும் சிற்றரசர்களும் வந்திருந்தார்கள்; எல்லோரும் அந்த ராஜகுமாரத்தியை அடைய ஆசையுள் ளவர்களா யிருந்தார்கள்; ஒருவர்பின் ஒருவராக அவர்கள் தங்கள் சமர்த்தைக் காட்டினார்கள்; அவர்களில் ஒவ்வொருவ ரும் குறியைப் பார்த்து அடிக்கத் தவறினார்கள்.

இந்தியாவில் நான்கு ஜாதிகள் உண்டு என்பது உங்க ளுக்குத் தெரியும்; மிகமிக உயர்ந்த ஜாதி பரம்பரை வைதீக னுடைய, பிராஹ்மணனுடைய ஜாதி; அடுத்தது, அரசர்க ளும் வீரர்களும் அடங்கிய க்ஷத்திரிய ஜாதி; அடுத்தது, வியாபாரிகளாகிய வைசியர்கள்; அடுத்தது, வேலையாளர்க ளாகிய சூத்திரர்கள். இப்பொழுது, இந்த ராஜகுமாரி இரண் டாவதாகிய க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்தவள்.

அவ் வரசர்களெல்லோரும் குறியைப்பார்த்தடிக்கத் தவறியபொழுது, துருபத ராஜனுடைய புத்திரன் கொலு மண்டபத்தின் மத்தியில் எழுந்திருந்து, "ராஜ ஜாதியாகிய க்ஷத்திரியஜாதி தவறிவிட்டது, இப்பொழுது மற்ற ஜாதி யார் தங்கள் சமர்த்தைக் காட்டலாம். பிராஹ்மணன், சூத்

திரன்கூட, இதில் முயற்சிக்கலாம்; எவனொருவன் குறியைப் பார்த்து அடிக்கின்றானோ, அவன் திரௌபதியை விவாகம் செய்துகொள்கிறான்" என்று சொன்னான்.

பிராஹ்மணர்களின் மத்தியில் ஐந்து பாண்டவச் சகோதரர்களும் உட்கார்ந்திருந்தார்கள். மூன்றாவது சகோதரனாகிய அர்ஜுனன் வில்வித்தையிலே வீரன். அவன் எழுந்து, முன்னே வந்தான். இப்பொழுது, பிராஹ்மண ஜாதி மிகவும் சாந்தமானது, பயந்தது. சட்டப்படி அவர்கள் யுத்தத்தைத் தொடக்கூடாது; அவர்கள் கத்தி யெடுக்கக் கூடாது; அபாயகரமான எந்த முயற்சியிலும் அவர்கள் தலையெடுக்கக்கூடாது. அவர்களுடைய வாழ்க்கை தியானம், ஆராய்ச்சி, அகந்தையை யடக்குதல் இவற்றாலாயதொன்றும். ஆகையால், அவர்கள் எவ்வளவு சாந்தமும் சமாதானமும் பொருந்திய ஜனங்கள் என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

இந்த மனிதன் எழுந்திருந்ததைப் பிராஹ்மணர்கள் பார்த்தவுடனே, க்ஷத்திரியர்கள் தங்கள்மீது கோபிக்கும்படி இவன் செய்யப்போகிறானென்றும், அவர்களெல்லோரும் கொல்லப்படப்போகிறார்களென்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆகையால், அவர்கள் அவனைத்தடுக்க முயற்சித்தார்கள்; ஆனால், அர்ஜுனன் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை; ஏனென்றால், அவன் யுத்தவீரன். அவன் கையிலே வில்லைத் தூக்கி எவ்விதப் பிரயாசையு மில்லாமல் அம்பைப் பூட்டி, அதை யிழுத்து, சக்கரத்தினூடே சரியாக அம்பை யெய்து அந்த மீனுடைய கண்ணைப் பார்த்து அடித்துவிட்டான்.

அப்பொழுது அங்கே மிகுந்த சந்தோஷம் உண்டா யிற்று. இராஜகுமாரியான திரௌபதி அர்ஜுனனை யணுகி, அவ் வழகிய புஷ்பமாலையை அவனுடைய சிரசின் மேலே போட்டாள்.

அரசர்களும் சிற்றரசர்களும் கூடிய இப் பெரிய கூட்டத்திலே "க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்த இவ் வழகிய ராஜ குமாரியை ஒரு பிராஹ்மணன் ஜயித்துக்கொண்டு போவதா" என்று பொறாமைகொண்ட அரசர்களுக்குள்ளே ஒரு பெருங் கூச்சல் உண்டாயிற்று. ஆகையால், அவர்கள் அர்ஜுனனுடனே யுத்தம் செய்து, பலாத்காரத் தினாலே அவளைப் பறித்துக்கொள்ள விரும்பினார்கள். (பாண்டவ) சகோதரர்கள் க்ஷத்திரியர்களுடனே பெரிய தொரு யுத்தம் செய்தார்கள்; ஆனால், ஜயமடைந்து வெற்றி யுடனே பெண்ணைக் கொண்டுபோய்விட்டார்கள்.

ஐந்து சகோதரர்களும் இப்பொழுது ராஜகுமாரியை யும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குக் குந்தியிடம் திரும்பி வந்தார்கள். பிராஹ்மணர்கள் பிச்சையேற்றுப் பிழைக்க வேண்டும்; ஆகையால், பிராஹ்மணர்கள்போன்று வாழ்ந்து வந்த அவர்கள் வெளியே போவது வழக்கம். தாங்கள் பிச்சை யெடுத்துக் கிடைத்ததை வீட்டுக்குக் கொண்டு வருவார்கள், தாயார் அதை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பாள். ஐந்து சகோதரர்களும் ராஜகுமாரியைக் கூட்டிக்கொண்டு தாயார் வசித்த குடிசைக்கு வந்து சேர்ந் தார்கள். அவர்கள் வேடிக்கையாக, "அம்மா, இன்று வீட்டுக்கு மிகமிக ஆச்சர்யமான பிச்சை கொண்டுவந்திருக் கிறோம்" என்று உரக்கச் சொன்னார்கள்.

தாயார், "எனது குழந்தைகாள்! நீங்களெல்லோரும் அதைப் பொதுவாக அநுபவியுங்கள்!" என்று மறுமொழி கூறினாள்.

பின்னர், தாயார் ராஜகுமாரத்தியைப் பார்த்துவிட்டு, "ஆ, நான் என்ன சொல்லிவிட்டேன்; அது பெண்ணு யிற்றே!" என்று பிரமித்தாள். ஆனால், என்ன செய்ய முடியும்! மாதாவின் வார்த்தை அப்படிச் சொல்லப்பட்டு விட்டது; அதை அவமதிக்கக் கூடாது! மாதாவின் வார்த் தைகள் நிறைவேற்றப்படவேண்டும்; அவள் பொய் மொழி புகன்றதேயில்லை; அவள் பொய் மொழி சொல்லும் படி விடக்கூடாது; ஆகையால், திரௌபதி ஐந்து சகோதரர் களுக்கும் பொது மனைவி யானாள்.

ஒவ்வொரு ஜனசமுதாயத்திலும் அபிவிருத்திக்கான படிகள் உண்டு என்பது உங்களுக்குத் தெரியும். இப் புரா ணத்தின் பின்னே, பூர்வீக காலங்களின் சரித்திரத்தை ஆச்சர்யமாகப் பார்க்கலாம்.(இந்தக்) காவியத்தின் ஆசிரியர் ஐந்து சகோதரர்கள் ஒரே ஸ்திரீயை விவாகம் செய்து கொண்ட விஷயத்தைக் கூறுகின்றார்; ஆனால், அதைப் 'பூசிமெழுகி' அச் செய்கைக்கு ஒரு காரணத்தையும் ஒரு சாக்குப் போக்கையும் காண முயற்சிக்கின்றார்,: "மாதாவி னுடைய ஆக்ஞை, மாதா இந்த விநோதமான விவாகத் துக்கு உத்தரவு கொடுத்தாள்" என்றும் மற்றும் ஒவ்வொரு ஜன சமூகத்திலும் சமுதாயத்தில் பல புருஷ விவாகத் துக்கு அநுமதி கொடுத்த ஒரு படி இருந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.—ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்களெல்லோரும் பொதுவில் ஒரு மனைவியை

விவாகம் செய்துகொள்வார்கள். இப்பொழுது, இது முற்காலத்திய பழய பல புருஷ விவாகப் படியின் தோற்றமே போலும்.

இதனிடையில், ராஜகுமாரியின் சகோதரன், மனதிலே குழப்ப மிகுந்தவனுகி, "இந்த ஜனங்கள் யார்? எனது சகோதரி விவாகம் செய்துகொள்ளப்போகிற இந்த மனிதன் யார்? அவர்களிடம் ரதங்களாவது, குதிரைகளாவது, ஒன்றுமே யில்லை. ஏன் அவர்கள் கால் நடையாகத்தானே போகிறுர்கள்!" என்று நினைத்தான். ஆகையால், அவன் கொஞ்சம் தூரத்திலே அவர்களைப் பின்தொடர்ந்து சென்றுன். இரவிலே அவர்களுடைய சம்பாஷணையை ஒளித்திருந்து கேட்டு அவர்கள் உண்மையில் க்ஷத்திரியர்களே யென்று நன்ருகத் தெளிந்தவனுனுன். பின்னர் துருபத ராஜன் அவர்கள் இன்னுரென்று தெரிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷ மடைந்தான்.

முதலில் அதிக ஆக்ஷேபனை யுண்டான போதிலும், அத்தகைய விவாகம் இவ் வரசர்களுக்கு அநுமதிக்கப் பட்டதே யென்று வியாசரால் சொல்லப்பட்டது, அது அநுமதிக்கப்பட்டது.

ஆகையால், துருபதராஜன் இந்தப் பல புருஷ விவாகத்துக்கு இணங்கவேண்டி வந்தது; அந்த ராஜ குமாரி பாண்டுவின் ஐந்து புத்திரர்களுக்கும் விவாகம் செய்விக்கப் பட்டாள்.

பின்னர், பாண்டவர்கள் சமாதானமாயும் திருப்தியுடனும் வாழ்ந்துகொண்டு நாளுக்கு நாள் சக்திமிகுந்தவர்களானுர்கள். துர்யோதனனும் அவனுடைய கட்சியாரும்

அவர்களை யழிப்பதற்குப் புதிய சதியாலோசனைகளை யோசித்தபொழுதிலும், பாண்டவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி பெரியோர்கள் திருதராஷ்டிரனிடம் நற்புத்தி கூறினர்கள்; ஆகையால், அவன் அவர்களை ஜனங்களெல்லோரும் சந்தோஷிக்க அழைத்து, அவர்களுக்கு ராஜ்யத்தில் பாதி கொடுத்தான். பின்னர், ஐந்து சகோதரர்களும் தங்களுக்காக இந்திரப் பிரஸ்தம் என்னும் ஒரு அழகிய நகரத்தைக் கட்டிக்கொண்டு, எல்லா ஜனங்களும் தங்களுக்குக் கப்பம் கட்டும்படி செய்து, தங்களுடைய ராஜ்யத்தை விஸ்தீரணப்படுத்திக் கொண்டார்கள்.

பின்னர், மூத்தவராகிய யுதிஷ்டிரர் புராதன இந்தியாவிலிருந்த எல்லா அரசர்களுக்கும் தாம் மேற்பட்ட சக்கரவர்த்தி யென்று தெரிவித்துக்கொள்ளும் பொருட்டு ஒரு ராஜசூய யாகம் செய்யத் தீர்மானித்தார். ஜயிக்கப்பட்ட அரசர்கள் கப்பம் கொண்டுவந்து, தாங்கள் ராஜபக்தியுள்ளவர்கள் என்று பிரமாணம் செய்துகொடுத்து, சரீரப் பிரயாசையும் எடுத்து அந்த யாகம் நடைபெறுதற்கு உதவி செய்யவேண்டும். அவர்களுக்குச் சிநேகிதரும் பந்துவுமான ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடம் வந்து "அந்த எண்ணம் நல்லதே" என்று சம்மதித்தார். ஆனல், அது நடைபெறுவதில் ஒரு இடையூறு ஏற்பட்டது. நூறு அரசர்களை பலியிடக் கருதிய ஜராசந்தன் என்னும் பெயருடைய ஒரு அரசன் தன்னிடம் எண்பத்தாறு அரசர்களைக் கைதிகளாக வைத்துக்கொண் டிருந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் ஜராசந்தனுடன் போர்புரியவேண்டும் என்று கூறினர்; ஆகையினுல், அவரும் பீமனும் அர்ஜுனனுமாகச்

சென்று அவ்வரசனை மல்லுக் கழைத்தார்கள்; அவன் ஒப்புக்கொண்டு, பதினன்கு நாட்கள் இடைவிடாது மல்யுத்தம் செய்து, கடைசியாகப் பீமனல் ஜயிக்கப்பட்டான். கைதி செய்யப்பட்டிருந்த அரசர்கள் அப்பொழுது விடுவிக்கப் பட்டார்கள்.

பின்னர், நான்கு இளைய சகோதரர்களும் ஒவ்வொருவரும் வெவ்வேறு வழியில் சென்று படையெடுத்து ஜயிக்கக் கருதி வெளியே சென்று, யுதிஷ்டிரருக்குக் கீழ் அடங்கியிருக்கும்படி எல்லா அரசர்களையும் செய்தான். அவர்கள் திரும்பிவந்து, அப் பெரிய யாகத்தின் செலவுகளுக்காகத் தாங்கள் சம்பாதித்துவந்த திரவிய மெல்லாவற்றையும் யுதிஷ்டிரர்களின் பாதங்களில் கொண்டுவந்து வைத்தார்கள்.

ஆகையால், இந்த யாகத்துக்கு எல்லா விடுதலைபெற்ற அரசர்களும் சகோதரர்களால் ஜயிக்கப்பெற்றவர்களும் வந்து, யுதிஷ்டருக்குக் காணிக்கை செலுத்தினர்கள். திருதராஷ்டிரனும் அவனுடைய புத்திரர்களும்கூட வந்து, யாகத்தை நடத்திவைத்துக் கொடுக்கும்படி அழைக்கப் பட்டார்கள். இதுதான் பின் நடக்கப் போகும் சண்டைக்கு விதை போட்டதாகும். யாகம் முடிந்தவுடனே, யுதிஷ்டிரர் சக்கரவர்த்தி யென்று முடி சூட்டப்பெற்று, ரரஜராஜேசுவரனெனத் தெரிவிக்கப்பட்டார். அவர்களுடைய ஆதிபத்தியமும் மகிமையும் ஐச்வர்யமும் துர்யோதனனல் பொறுக்க முடியாது, அவன் யுதிஷ்டிரரிடத்திலே பொருமை மிகுந்தவனுகி யாகத்தினின்றும் திரும்பி வந்தான். பலாத்காரத்தினல் அவர்களை ஜயிப்பதற்குத் தன்

னுடைய சக்தி போதாதென்பதைத் தெரிந்துகொண்டவனாய், 'அவர்களைத் தந்திரமாகக் கெடுக்கவேண்டும்' என்று யோசனைகள் செய்தான்.

யுதிஷ்டிராகிய இவ் வரசருக்குச் சூதாடுவதிலே பிரியம் உண்டு. மோசச் சூதாடியும், துர்யோதனனுடைய துர்மந்திரியுமான சகுனியுடனே சூதாடும்படி ஒரு தீயநோக்கிலேபந்தயமிட்டு அழைக்கப்பட்டார். புராதன இந்தியாவிலே க்ஷத்திரிய ஜாதியைச் சேர்ந்த மனிதன் போருக்கு அழைக்கப்பட்டால், அவன் தனது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத், தனக்கு என்ன கஷ்டம் வருமாயினும் லக்ஷியம் செய்யாமல், அவ் வழைப்பை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். சூதாடும்படி அழைக்கப்பட்டால், விளையாடுவது கௌரவமாயும், மறுப்பது அகௌரவமாயு மிருந்தது. "யுதிஷ்டராகிய அரசர் எல்லா நற்குணங்களினுடையவும் உருவமாம்" என்று இதிகாசம் கூறுகின்றது. அப்பெரிய மகானுகிய அரசர்கூட அவ் வழைப்பை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. சகுனியும் அவனுடைய கக்ஷியாரும் பொய்க்காய்களைச் செய்துகொண்டு வந்திருந்தார்கள். ஆகையினுல், யுதிஷ்டிரர் ஒவ்வொரு ஆட்டத்திலும் தோற்றுக்கொண்டே வந்தார்; நஷ்டங்கள் அதிகமாக, ரோஷம் உண்டாகி, அவர் தம்மிட மிருந்த எல்லாவற்றையும் பந்தயம் வைத்து அந்தப் பாழும் விளையாட்டை விளையாடிக்கொண்டே போனுர்; எல்லாம் போய், கடைசியாக அவர் தமது உடைமைகளையும், தமது ராஜ்யத்தையும் எல்லாவற்றையும் இழந்துவிட்டார். கடைசி நிலைமை வந்துவிட்டது; மேலும் பந்தயம் வைக்கப்பட்டபொழுது

அவருக்குத் தமது சகோதரர்களை ஈடு வைப்பதைவிட வேறு வழியில்லாது போய்விட்டது; கடைசியாக அழகிய திரௌதியையும் ஈடுவைத்து எல்லாவற்றையும் இழந்து விட்டார். இப்பொழுது அவர்கள் (பாண்டவர்கள்) அடியோடு கௌரவர்களுடைய தயவிலே யிருந்தார்கள்; கௌரவர்கள் அவர்களைப் பலவிதத்திலும் இழிவுபடுத்தி, திரௌபதியை மிகமிக மனுஷ்யத்தனமல்லாத நடத்தைக்கு உட்படுத்தினார்கள். கடைசியாகக் குருட்டரசனுடைய மத்தியஸ்தத்தின்மேல், அவர்கள் ஸ்வதந்திரம் பெற்று, திரும்பச் சென்று தங்கள் தேசத்தை ஆளும்படி சொல்லப்பட்டார்கள்.

ஆனால், துர்யோதனன், அபாயத்தைக் கண்டு கொண்டு, இன்னுமொருதடவை சூதாடுவதற்கு அனுமதி கொடுக்கும்படி தனது பிதாவைக் கட்டாயப்படுத்தினான்; இதிலே தோற்றுப்போகிற கட்சி பன்னிரண்டு வருஷங்களுக்குக் காடுகளிலே வாசம் செய்து பின்னர் எவருக்கும் தெரியாமல் ஒருவருஷம் ஒரு நகரத்திலே வசிக்கவேண்டும்; ஆனால், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால், மறுபடியும் முதலிலிருந்து அவ்வாறே நடக்கவேண்டும்; பின்னர் தான் ராஜ்யம் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். இந்தக் கடைசி விளையாட்டிலும் யுதிஷ்டிரர் தோற்றுவிட்டார்.

ஐந்து பாண்டவச் சகோதரர்களும் வீடற்ற பிரஷ்டர்களாகத் திரௌபதியைக் கூட்டிக்கொண்டு காட்டுக்குச் சென்றார்கள். அவர்கள், காடுகளிலும் மலைகளிலும் பன்னிரண்டு வருஷம் வசித்தார்கள். அங்கே அவர்கள் அநேக

நற்குணச் செய்கைகளையும் பராக்கிரமச் செய்கைகளையும் செய்தது மன்றியில், அனேக பரிசுத்த ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, நீண்ட தீர்த்தயாத்திரையும் அடிக்கடி போவார்கள். காவ்யத்திலே அந்தப் பாகமானது மிகவும் ருசிகரமாகவும், விஷயங்கள் அடங்கியதாகவும் இருக்கின்றது; புஸ்தகத்திலேயுள்ள இந்தப் பாகத்திலே நிறைந்திருக்கின்ற சங்கதிகளும், சரித்திரங்களும், கதைகளும் பல அதில் மத சம்பந்தமாயும் தத்துவஞான சம்பந்தமாயும் அழகானவும் ஆநந்தகரமானவுமான புராதன இந்தியக் கதைகள் இருக்கின்றன. பெரியமகான்கள் (இந்தச்) சகோதரர்களை அவர்களுடைய வனவாசத்திலே பார்க்க வந்து, அவர்கள் தங்கள் வனவாச கஷ்டத்தை அவ்வளவு பாராட்டாதிருக்குமாறு, அநேக அறிவுறுத்தும், புராதன இந்தியக் கதைகளை அவர்களுக்குக் கூறினார்கள். அவற்றுள் நான் உங்களுக்கு இங்கு ஒன்று மாத்திரம் எடுத்துக் கூறுகிறேன்:—

அச்வபதி என்று ஒரு அரசன் இருந்தான். அவ்வரசனுக்கு ஒரு புத்திரி யிருந்தாள். ஹிந்துக்களின் ஒரு பரிசுத்த மந்திரத்தின் நாமமாகிய சாவித்ரி என்று அவள் பெயரிடப்படும்படி அவ்வளவு நற்குணம் வாய்ந்தவளாயும் அழகாயு மிருந்தாள். சாவித்திரிக் குவயது வந்தவுடன், அவளுடைய பிதா, ஒரு புருஷனைத் தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி அவளிடம் கூறினார். இந்தப் பூர்வீக, இந்திய ராஜகுமாரிகள் மிகவும் ஸ்வதந்திரர்களா யிருந்தார்களென்பதையும், தாங்கள் விரும்பிய அரசர்களைக் கணவர்களாக வரித்துக்கொண்டார்க ளென்பதையும் நீங்கள் பார்க்கிறீர்கள்

சாவித்திரி சம்மதித்து, ஒரு தங்க ரதத்தி லேறிக் கொண்டு, அவளுடைய பிதா அவளை ஒப்புவித்திருந்த விருத்தாப்பிய பிரதானிகளுடனும் காவலாளிகளுடனும் தூரமான பிரதேச அரசர்களைப் பார்த்தாள்; ஆனால், அவர்க ளில் ஒருவராலும் சாவித்ரிதியின் ஹிருதயத்தை வெல்ல முடியவில்லை. பூர்வீக இந்தியாவிலே மிருகங்களுக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டவையும், மிருகங்களைக் கொல்லக்கூடாததுமான காடுகளில் ஒன்றிலிருந்த ஒரு பரி சுத்தமான ஆச்ரமத்துக்கு அவர்கள் கடைசியாக வந்து சேர்ந்தார்கள். அந்த மிருகங்களுக்கு மனிதனிடத்தில் பயமே கிடையாது; ஏரிகளிலிருந்த மீன்கள்கூட வந்து, கையிலிருந்து ஆகாரத்தை எடுத்துக்கொள்ளும். ஆயிரக் கணக்கான வருஷங்களாக எவரும் அவற்றில் எதையும் கொன்றதில்லை. மகான்களும் விருத்தாப்பியர்களும் வசிப்ப தற்குச் செல்வார்கள். குற்றவாளிகளும் அங்கே பத்திர மாயிருப்பார்கள். மனிதனுக்கு வாழ்க்கையிலே வெறுப்பு உண்டாய்விட்டால், அவன் காட்டுக்குப் போய்விடுவான். மகான்களுடைய சகவாசத்திலே மதவிஷயமாகப் பேசிக் கொண்டும், அதைப்பற்றியே சிந்தனை செய்துகொண்டும் அவன் தனது வாழ்நாளின் பாக்கிப் பாகத்தைக் கழிப்பான்.

த்யூமத்சேனன் என்னும் ஒரு அரசன் இருந்தான். அவன் தனது எதிரிகளால் தோற்கடிக்கப்பட்டு அவனு டைய ராஜ்யத்திலிருந்து துரத்துண்டிருக்கும்படி நேர்ந்தது. அவன் விருத்தாப்பியனுய்க்கண்பார்வையும்இழந்திருந்தான். இந்த எளிய, விருத்தாப்பியனான குருட்டு அரசன் தனது ராணியையும் புத்திரனையும் கூட்டிக்கொண்டு, காட்டுக்கு

வந்து, கடூரமான தவம் செய்துகொண்டு தனது வாழ் நாளைக் கழித்துவந்தான். அவனுடைய புத்திரனுடைய பெயர் சத்தியவான்.

சாவித்ரியானவள் பற்பல ராஜதானிகளை யெல்லாம் பார்த்துவிட்டுக் கடைசியாக இந்த ஆச்ரமத்துக்கு வரும்படி நேர்ந்தது. மகான்களைத் தரிசனம் செய்யாமல், எத்தகைய பெரிய அரசனும் ஆச்ரமங்களைக் கடந்து செல்லலுதல் கூடாது; ஏனெனில், அத்தகைய கௌரவமும் மரியாதையும் இந்தப்பரிசுத்த புருஷர்களுக்குச் செலுத்தப்பட்டு வந்தது. இந்தியாவின் மிகமிகப் பெரிய சக்ரவர்த்தியும் தான் கந்தை களை யுடுத்துக் கிழங்குகளையும் கனிகளையும் தின்றுகொண்டு காட்டிலே வசித்துவந்த ஏதோ ஒரு மகரிஷியின் சந்ததி யில் வந்தவன் என்று சொல்லிக்கொள்வதற்கு மிகமிகச் சந்தோஷப்படுவான். நாம் எல்லோரும் மகரிஷிகளின் புத் திரர்கள். மதத்துக்குச் செலுத்தப்பட்ட மரியாதை அது. ஆகையால், அரசர்கள்கூட ஆச்ரமங்களின் வழியாகச் செல்லுங்காலையில் உள்ளே சென்று, மகரிஷிகளுக்கு மரி யாதை செலுத்திப்போவதைக் கௌரவமாகக் கருதுவார் கள். அவர்கள் குதிரையின்மீது ஏறிவந்தால், அவர் (மகான்)களிடம் செல்லும்போது, கீழேயிறங்கி நடப்பார் கள். அவர்கள் இரதத்திலே வந்தால், ரதம், ஆயுதங்கள் முதலியவை அவர்கள் (ஆச்ரமத்தினுள்ளே) நுழையும் போது, வெளியே வைக்கப்பட்டுவிடவேண்டும். யுத்த கோலம்பூண்ட மனிதன் சாந்தமாயும் அமைதியாயுமுள்ள ஒரு வைதீக புருஷன் மாதிரி வந்தாலொழிய, உள்ளே நுழைதல் கூடாது.

ஆகையால், சாவித்ரியானவள் இந்த ஆச்ரமத்துக்கு வந்து அங்கே சந்யாசியி (அரச)னுடைய புத்ரனாகிய சத்யவானைப் பார்த்தாள்; அவளுடைய ஹிருதயம் ஜெயிக்கப்பட்டுவிட்டது. அவள், அரண்மனைகளிலும் ராஜமாளிகைகளிலும் இருந்த அரசர்களெல்லோரிடத்திலிருந்தும் தப்பித்துக்கொண்டாள்; ஆனால், இங்கே த்யூமத்சேனனுடைய வனாந்திர வாசஸ்தலத்தில் அவனுடைய புத்திரனாகிய சத்தியவான் அவளுடைய ஹிருதயத்தைத் திருடிவிட்டான்.

சாவித்ரியானவள் பிதாவினுடைய கிருகத்துக்குத் திரும்பிவந்தபொழுது, அவன் அவளைப் பார்த்து, "சாவித்திரி! அருங்குழந்தாய்! நீ விவாகம் செய்துகொள்ள விரும்பும் எவரையாவது பார்த்தாயா?" என்று கேட்டான்.

அப்பொழுது, சாவித்ரியானவள் கூச்சத்துடன் மெல்ல, "ஆம், அப்பா!" என்றாள்.

"அந்த அரசனுடைய பெயர் என்ன?"

"அவர் (இப்பொழுது) அரசனல்லர்; ஆனால், ராஜ்யத்தை யிழந்துவிட்ட த்யூமத்சேனன் என்னும் அரசனுடைய புத்திரர். பிதிரார்ஜிதம் இல்லாத அரசர், தனி வாழ்க்கை வாழ்கிறார்; காட்டிலே சந்யாசவாழ்க்கை யுடையவர்; கிழங்குகளையும் கீரைகளையும் சேகரித்து, ஒரு குடிசையில் வசிக்கின்ற தனது கிழட்டுப் பிதாவுக்கும் மாதாவுக்கும் உணவுகொடுத்து உதவிபுரிந்துகொண்டிருக்கிறார்."

இதைக் கேட்டவுடனே பிதா, அப்பொழுது அங்கே வந்திருந்த நாரத மகரிஷியினிடத்தில் கலந்து யோசனைபண்

ணினார். அவர் "அது மகா மகா கெட்ட சகுனத்துடன் கூடியவரன்" என்று சொல்லிவிட்டார்.

அப்பொழுது அரசன் அவரை, "அப்படிச் சொன்னதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

நாரதர், "இப்பொழுதிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் அந்த வாலிபன் மரிப்பான்" என்றார்.

அப்பொழுது அரசன் பயந்து நடுங்கி, "சாவித்ரி! இந்த வாலிபன் பன்னிரண்டு மாதங்களில் மரிக்கப்போகின்றான்; நீ விதவையாய்விடுவாய்; அதை யோசித்துப் பார்! எனது குழந்தாய்! அதை விட்டுவிடு; அற்ப ஆயுளில் மரிக்கப்போகும் ஒரு மாப்பிள்ளையை நீ ஒருபொழுதும் விவாகம் செய்துகொள்ளுதல் கூடாது" என்று சொன்னான்.

"பிதாவே! பாதகமில்லை; இன்னொருவனை விவாகம் செய்து, மனத்தின் பாதி விருத்தியத்தைத் தியாகம்செய்யும்படி சொல்லாதீர்கள்; ஏனெனில், நான் என்னுடைய மனத்திலே கணவனாக அந்த நல்ல, தீரனாகிய சத்யவானையே ஏற்றுக்கொண்டு நேசிக்கிறேன்."

சாவித்ரி மனத்திலும் ஹிருதயத்திலும் வைராக்கியமாயிருக்கிறாளென்று அரசன் கண்டு, சாவித்ரியின் இஷ்டத்துக்கு ஒப்புக்கொண்டான்.

பின்னர் சாவித்ரி ராஜகுமாரனாகிய சத்யவானை விவாகம் செய்துகொண்டாள். அவள் தான் வரிந்தெடுத்த புருஷனுடன் வாழ்வதற்கும், தனது புருஷனுடைய பெற்றோர்களுக்கு உதவிபுரிதற்குமாகத் தனது பிதாவின் அரண்மனையை விட்டுவிட்டு, மெல்லக் காட்டுக்குச் சென்றுவிட்டாள்.

இப்பொழுது, சத்யவான் மரிக்கப்போகும் குறிப்பிட்ட தேதி சாவித்ரிக்குத் தெரிந்தபொழுதிலும், அவள் அதை அவனிடத்தில் கூறவேயில்லை. தினந்தோறும் அவன் காட்டுக்குச் சென்று, கனிகளும் புஷ்பங்களும் சேகரித்துக் கொண்டு விறகும் எடுத்துக்கொண்டு, குடிசைக்குத் திரும்பி வருவான். அவள் சமையல்செய்து, விருத்தாப்பியர்களுக்கு உதவி புரிவாள். குறிப்பிட்ட தினம் சமீபிக்கும் வரையில் அவர்களுடைய வாழ்க்கை இவ்விதமாக நடந்துவந்தது; மூன்று நாட்களே மிகுதி யிருந்தன.

அவள், மூன்று நாட்களும் உபவாசமிருந்து இரவுபகல் உறங்காமல் கடுந்தவம் புரிந்தாள். அன்றையதினம் சாவித்ரி ஒரு நிமிஷத்துக்குக் கூட அவன் தனது பார்வையினின்றும் மறைந்திருக்கச் சகிக்கவில்லை. அவன் வழக்கம்போலக் கீரைகளும் விறகும் கொண்டுவரச் சென்றபொழுது, தனது புருஷனுடன் தானும் கூடச் செல்வதற்கு அவனுடைய பெற்றோர்களிடம் அனுமதி கேட்டு, அவர்களுடைய சம்மதத்தை யடைந்து, அவளும் போனாள்.

திடீரென்று அவன் தளதளத்த குரலில் தனக்கு மயக்கம் வருகிறதென்று அவளிடம் கூறினான். "எனது தலை கிறுகிறுக்கின்றது; அருஞ் சாவித்ரியே! எனது புலன்கள் மயங்குகின்றன; எனக்குத் தூக்கம் வருகிறதுபோலத் தோன்றுகிறது; கொஞ்சநேரம் உன் பக்கம் நான் படுத்திருக்கிறேன்."

அவள் பயந்து நடுங்கி, "எனது மிகமிக அரிய நாதா! வாருங்கள்! எனது மடியில் உங்கள் தலையை வைத்து உறங்குங்கள்!" என்றாள்.

அவன், கொதித்துக்கொண்டிருந்த தன்னுடைய தலையைத் தனது மனைவியின் மடியில் வைத்துப் படுத்தான், சீக்கிரத்தில் பெருமூச்சு விட்டான், மரித்துவிட்டான்.

அவள் அவனைக் காட்டியணைத்துக்கொண்டு, தனது கண்களில் கண்ணீர் ஒழுக, அங்கே அந்தத் தனிமையான காட்டிலே உட்கார்ந்திருந்தாள். அப்பொழுது எமகிங்கரர்கள் சத்யவானுடைய ஜீவனைக் கொண்டுபோவதற்கு அங்கே வந்தார்கள். ஆனால், அவனுடைய சிரசானது அவளுடைய மடியில் வைக்கப்பட்டிருந்தது. சாவித்ரி தனது புருஷனுடைய பிரேதத்துடன் உட்கார்ந்திருந்த இடத்துக்கு அவர்கள் வர முடியவில்லை. அவளைச் சுற்றி ஒரு அக்கினி மண்டலம் எரிந்துகொண்டிருந்தது; எம கிங்கரர்கள் ஒருவர் கூட அதனுள் போக முடியவில்லை.

அவர்களெல்லோரும் அதினின்றும் பின்வாங்கியோடி, எமராஜனிடத்தில் திரும்பிச் சென்று, இவனுடைய ஜீவனைக் கொண்டுவாராததற்குக் காரணம் சொன்னார்கள்.

பின்னர் மரண தெய்வமும், மரித்தோர்களை விசாரிப்பவனுமாகிய எமன் வந்தான். அவனே மரித்த முதல் மனிதன். பூமியில் மரித்த முதல் மனிதன்—மரிக்கின்றவர்கள் எல்லோருக்கும் அவன் அதிபதியாய்விட்டான். ஒரு மனிதன் இறந்தபின், 'அவனைத் தண்டிப்பதா? அல்லது வெகுமானம் செய்வதா?' என்பதை யவன் தீர்மானிக்கின்றான்.

அவன் சாவித்ரியினிடத்தில் வந்தவுடன், "புத்திரீ! இந்தப் பிரேதத்தை விட்டுவிடு; ஏனெனில், மரண மென்பது அழியப்பட்டவர்களுடைய கதியே யென்பதை யறிந்துகொள்; மரித்தவர்களுக்குள் முதலானவன் நானே; பின்

னர் ஒவ்வொருவரும் மரிக்கத்தான் வேண்டியிருக்கிறது; மரணமே மனிதனுடைய விதி" என்று சொன்னான்.

இவ்விதம் சொன்னவுடன், சாவித்ரி விட்டுவிட்டாள்; எமன் ஜீவனை ஆகருஷித்துவிட்டான். எமன் அந்த வாலிபனுடைய ஜீவனைக் கைப்பற்றிக்கொண்டு சென்றான்.

அவன் கொஞ்சத்தூரம் போவதற்குமுன், சருகுகளில் நடை சப்தம் கேட்டான். அவன் திரும்பிப் பார்த்தான். "சாவித்ரி, குழந்தாய்! நீ ஏன் என்னைப் பின்பற்றிவருகிறாய்? இது மனிதர்கள் எல்லோருடையவும் விதியாகும்."

சாவித்ரி, "பிதாவே! நான் உன்னைப் பின்தொடர்ந்து வரவில்லை; ஆனால், இதுவும் ஸ்திரீயினுடைய விதியாகும்; அவளுடைய அன்பு அவளை எங்குக் கொண்டு செல்லுகிறதோ அங்கு அவள் போகிறாள்; நித்திய நியதி காதலனையும் காதலியையும் பிரிக்கின்றதில்லை" என்று மறுமொழி கூறினாள்.

அப்பொழுது மரணதேவதை கூறியதாவது, "உனது புருஷனுடைய உயிரைத்தவிர வேறு ஏதாவது வரம் கேள்?"

"ஏ, மரணத்துக்கு அதிபதியே! வரங் கொடுப்பதற்குத் தங்களுக்குப் பிரியமானால், எனது மாமனார் தமது குருட்டுத் தன்மை நீங்கி ஆநந்தமா யிருக்கவேண்டு மென்று கேட்கிறேன்."

"தர்மபுத்திரி! உனது பரிசுத்த விருப்பம் அளிக்கப் படுகின்றது."

பின்னர் எமன் சத்தியவானுடைய உயிரை எடுத்துக் கொண்டு நடந்தான்.

மறுபடியும் பின்புறமிருந்து அதே காலடி கேட்டது. "சாவித்ரி! எனது குழந்தாய்! நீ என்னை இன்னும் பின் தொடர்ந்து வருகிறாயா?"

"ஆம், பிதாவே! நான் அப்படிச் செய்யாமலிருக்க முடியவில்லை; நான் திரும்பிச் செல்லத்தான் முயற்சிக்கிறேன்; ஆனால், மனமானது புருஷன் பின்னால் போகின்றது; சரீரம் பின் தொடர்கின்றது. ஜீவன் போய்விட்டது, ஏனெனில், அந்த ஜீவனில் எனது ஜீவனும் உள்ளது! ஜீவனை எடுத்துக் கொண்டு செல்லும்பொழுது, சரீரம் பின்தொடர்கின்றது, இல்லையா?"

"அழகிய சாவித்ரியே! உனது வார்த்தைகளால் நான் சந்தோஷப்பட்டேன்; என்னிடத்தில் இன்னொரு வரம் கேள்! ஆனால், அது உன்னுடைய புருஷனது உயிராயிருக்கக்கூடாது."

"பிதாவே! தாங்கள் சந்தோஷமாக இன்னொரு வரம் கொடுப்பதானால், எனது மாமனார் அவர் இழந்துவிட்ட சொத்தையும் ராஜ்யத்தையும் திரும்ப அடைந்துகொள்ள வேண்டும்."

எமன் மறுமொழி கூறியதாவது, "அன்புள்ள புத்திரி! இப்பொழுது இந்த வரம் கொடுக்கின்றேன்; ஆனால், நீ வீட்டுக்குத் திரும்பிச் செல்; ஏனெனில், உயிருடன் அழிவுடைய எவரும் எமனுடன் போக முடியாது."

பின்னர் எமன் சென்றான்.

ஆனால், பணிவும் விசுவாசமுமுள்ள சாவித்ரி இன்னும் தனது காலஞ்சென்ற புருஷனைப் பின்பற்றித் தொடர்ந்தாள். எமன் மறுபடியும் திரும்பிப் பார்க்கிறான்.

"பெருங்குணமுள்ள சாவித்ரி! நீ வருவதில் பயனில்லை; பின் தொடராதே."

"எனது காதலனைத் தாங்கள் எங்குக் கொண்டுசெல்கின்றீர்களோ அங்கு நான் வராமலிருக்க முடியாது."

"அப்படியானால், சாவித்ரி! உனது புருஷன் பாபியென்றும் நரகம் செல்லவேண்டியிருக்கிறதென்றும் வைத்துக்கொள். அப்படியானால் நீயும் காதலனுடன் செல்வாயா? "

"ஜீவிதமாயினும் சரியே, மரணமாயினும் சரியே, ஸ்வர்க்கமாயினும் சரியே, நரகமாயினும் சரியே; அவர் செல்லுமிடத்துக்குப் பின்தொடர்வதில் எனக்குச் சந்தோஷமே" என்று அன்புள்ள மனைவி சொன்னாள்.

"எனது குழந்தாய்! உனது வார்த்தைகள் ஆநந்தகரமாயிருக்கின்றன. உன்னிடத்தில் எனக்கு மிகச் சந்தோஷம். இன்னொரு வரம் கேள்; ஆனால், மரித்தவர்கள் மறுபடியும் பிழைப்பதில்லை."

"தாங்கள் அப்படி யநுமதி கொடுக்கிறதினாலே, எனது மாமனாருடைய சந்ததி யழியாமலிருக்கட்டும்; அவருடைய ராஜ்யம் சத்யவானுடையபுத்திரர்களுக்குக்கிடைக்கட்டும்."

அப்பொழுது மரணதேவதை புந்நகையுடன் கூறியதாவது:—"எனது புத்திரி! இப்பொழுது நீ உனது இச்சையை அடைவாய்; இதோ உனது புருஷனுடைய ஜீவன். அவன் மறுபடியும் உயிர்த்தெழுவான். அவன் ஒரு பிதாவாக வாழ்வான்; உனது குழந்தைகளும் காலக்கிரமத்திலே அரசு புரியும். வீட்டுக்குத் திரும்பிச் செல். காதல் மரணத்தை ஜயித்துவிட்டது! எந்த ஸ்திரீயும் உன்னைப்

போன்று அன்பு செலுத்தியதில்லை. உண்மையான அன்பினுடைய சக்திக்கு விரோதமாய் நிற்பதற்கு மாணதேவதையாகிய நான்கூட சக்தியற்றவன் என்பதற்கு நீயே பிரமாணமாயிருக்கிறாய்.''

இதுதான் சாவித்ரியைப்பற்றிய கதை. மாணத்தினால் ஜயிக்கப்பட முடியாத அன்பையுடைய சாவித்ரியைப் போன்று இருக்க, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் ஆசைப்படல் வேண்டும்; அவள், இந்த அபாரமான அன்பினாலே, எமனிடத்திலிருந்துகூடத் தனது புருஷனுடைய உயிரை மீட்டுக்கொண்டாளல்லவா?

அந்தப் புத்தகத்திலே இதுபோன்று அழகிய கதைகள் நூற்றுக்கணக்காக நிறைந்திருக்கின்றன. மகாபாரதமானது உலகிலுள்ள மிகமிகப் பெரிய கிரந்தங்களுள் ஒன்று என்றும், 18 பர்வங்களில் லக்ஷம் வாக்கியங்கள் அடங்கியுள்ள தென்றும் நான் உங்களிடம் கூறிக்கொண்டு ஆரம்பித்தேன்.

நமது பிரதான கதைக்குத் திரும்பிவருவோம். நாம் பாண்டவச் சகோதரர்களை வனவாசத்திலே விட்டோம். அங்கும் அவர்கள் துர்யோதனனுடைய துராலோசனைகளால் தீண்டப்படாதிருக்க விடப்படவில்லை; ஆனால், அவையெல்லாம் பயனற்றவையாய்விட்டன.

அவர்களுடைய வனவாச வாழ்க்கையில் ஒரு கதையை நான் உங்களுக்கு இப்பொழுது சொல்கின்றேன். ஒருநாள் சகோதரர்களுக்குக் காட்டிலே தாகம் அதிகமாயிற்று. யுதிஷ்டிரர் தமது சகோதரனாகிய நகுலனைப் பார்த்துத் தண்ணீர் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார். அவன் தண்

ணீர் உள்ள இடத்தை நோக்கி வேகமாகச் சென்று, சீக்கிரத்திலே பளிங்குபோன்ற தண்ணீர் உடைய ஒரு ஏரியிடம் வந்து அதன் தண்ணீரைக் குடிக்கப்போகுந்தறுவாயில், ஒரு சப்தம் பின்வரும் வார்த்தைகளைக் கூறக் கேட்டான் :—

"ஏ, குழந்தாய்! நில்லு! முதலில் எனது கேள்விகளுக்கு மறுமொழி கூறு! பின்னர் இந்தத் தண்ணீரைக் குடி!"

ஆனால் நகுலன் மிகுந்த தாகமுடையனா யிருந்ததினால் இந்த வார்த்தைகளை அலட்சியம் செய்து, அந்தத் தண்ணீரைக் குடித்துவிட்டான். குடித்துவிட்டுக் கீழே விழுந்து மரித்தான்.

நகுலன் திரும்பி வாரததினாலே, யுதிஷ்டிர ராஜன், தம்முடைய சகோதரனைத் தேடிப் பிடித்து, அவனையும் கூட்டிக்கொண்டு, தண்ணீர் கொண்டுவரும்படி சகாதேவனிடம் கூறினார்.

அப்படியே சகாதேவன், அந்த ஏரியினிடம் செல்ல, தனது சகோதரன் இறந்ததினா லுண்டான வருத்தத்துடனும், கடுமையான தாகத்தினால் வருந்தியும், அவன் தண்ணீரை நோக்கிச் செல்ல, அவனால் அதே வார்த்தைகள் கேட்கப்பட்டன.

"ஏ, குழந்தாய்! முதலில் எனது கேள்விகளுக்கு மறுமொழி கூறு! பின்னர் தண்ணீரைக் குடி!"

அவனும் இந்த வார்த்தைகளை அலட்சியம் செய்து, தனது தாகத்தைத் தணித்துக்கொள்ள, உடனே கீழே விழுந்து மரித்தான்.

பின்னர், யுதிஷ்டிரரே தமது சகோதரர்களைத் தேடிச் செல்ல எழுந்தார். கடைசியாக அவர் அவ் வழகிய ஏரி யண்டையில் வந்து, தமது சகோதரர்கள் இறந்துகிடக்கக் கண்டார்.

பார்த்தவுடனே அவருடைய ஹ்ருதயத்திலே துக்கம் நிறைந்து, அவர் அழ ஆரம்பித்தார். "சிறிய மீன்களைத் தின்று நாரையாக வசிக்கின்ற ஒரு யக்ஷன் நான். காலம் சென்ற ஜீவர்களுடைய அதிபதியின் ஆட்சியின்கீழ் உனது இளைய சகோதரர்கள் கொண்டுவரப்பட்டது என்னாலே யேயாம். ஏ, அரசனே! என்னால் கேட்கப்படும் கேள்வி களுக்கு நீ மறுமொழி யளிக்காமற்போனால், நீயும் ஐந்தா வது பிணமாகக் கணக்கிடப்படுவாய். முதலில் என்னு டைய கேள்விகளுக்கு பதிலளித்துவிட்டு, ஏ, குந்தி புத்திரா! நீ (தண்ணீர்) குடிப்பாய்! வேண்டுமளவு கொண்டுபோ வாய்," என்று கூறுவதை அவர் திடீரென்று கேட்டார்.

யுதிஷ்டிரர், "எனது அறிவுக்கு எட்டியவளவில் நான் உனது கேள்விகளுக்கு மறுமொழி யளிக்கின்றேன்; கேட் பாய்" என்று பதிலளித்தார்.

யக்ஷன் பின்னர் அவரைப் பல கேள்விகள் கேட் டான்; அவற்றுக்கெல்லாம் யுதிஷ்டிரர் திருப்தியாக மறு மொழி யளித்தார். கேள்விகளுள் ஒன்று—"இவ் வுலகிலே மிகமிக ஆச்சர்யமான விஷயம் யாது?"

நாம் நமது சகோதர ராசிகள் ஒவ்வொரு நிமிஷத்தி லும் விழுந்து மரிப்பதைக் காண்கின்றோம்; ஆனால், பின் உள்ளவர்கள் தங்களுக்கு ஒருபொழுதும் மரணமே யில்லை யென்று நினைத்துக்கொள்கின்றார்கள்; மிகமிக ஆச்சர்யமான

விஷயம்; மரணத்தை நேரில் பார்த்தும் தனக்கு மரணம் உண்டென்று எவனும் நம்புகிறதில்லை!''

கேட்கப்பட்ட இன்னொரு கேள்வியாவது:—"மதத்தினுடைய ரகஸ்யத்தை யறிந்துகொள்ளும் மார்க்கம் யாது?''

யுதிஷ்டிரர் மறுமொழி கூறியதாவது, "விவாதத்தினால் ஒன்றும் தீர்மானிக்கப்பட முடியாது; கொள்கைகள் அநேகம் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று எதிரிடையாக சாஸ்திரங்கள் அநேகம் இருக்கின்றன. மகான்கள் இருவர் இருந்தால், அபிப்பிராயங்களில் பேத மில்லாமலில்லை. மதத்தினுடைய இரகஸ்யம் இருண்ட குகைகளில் புதைந்து கிடக்கின்றன. ஆகையால், பின்பற்றவேண்டிய மார்க்கமானது பெரியோர்கள் நடந்த மார்க்கமே.''

பிறகு, யக்ஷன் சொன்னதாவது, "நான் சந்தோஷப்படுகின்றேன். நான் தர்மதேவதை; நாரை யுருவத்தில் தோன்றியிருக்கும் நீதிக்கடவுள்; நான் உன்னைப் பரிசோதிக்க வந்தேன். இப்பொழுது, உனது சகோதரர்களைப் பார்! அவர்களில் ஒருவரும் மரிக்கவில்லை. அதெல்லாம் எனது மாயா ஜாலம்; அஹிம்சையானது லாபம், சுகம் இவ்விரண்டையும் பார்க்கிலும் உயர்ந்ததாக உன்னால் கருதப்படுகிறதினாலே, பாரத வம்சத்து ரிஷபமே! உனது சகோதரர்கள் எல்லோரும் ஜீவிக்கட்டும்.''

யக்ஷன் இந்த வார்த்தைகளைச் சொன்னவுடனே, பாண்டவர்கள் எழுந்தார்கள்.

யுதிஷ்டிர ராஜனுடைய தன்மையைத் தெரிந்துகொள்வதற்கு இது ஒரு திருஷ்டாந்தம். அவருடைய மறுமொழிகளிலிருந்து அவருக்குஅரசனுடைய லக்ஷணத்தைப்பார்க்கி

லும் தத்துவஞானியினுடைய தன்மை, யோகியினுடைய தன்மை அதிகமா யிருக்க நாம் காண்கின்றோம்.

இப்பொழுது பதின்மூன்றாவது வருஷம் நெருங்கி விடவே, யக்ஷன் அவர்களை விராடனுடைய ராஜ்யத்தில் சென்று, அவர்களுக்கு நன்றாகப் பிடித்த வேஷங்கள் தரித்து, அங்கே வசிக்கும்படி சொன்னான்.

அப்படியே பன்னிரண்டு வருஷம் வனவாசம் கழிந்த பின்னர், அவர்கள் மிகுதி ஒரு வருஷத்தை மறைவில் கழிப்பதற்காக வெவ்வேறு வேஷங்கள் தரித்து, விராடனுடைய ராஜ்யத்துக்குச் சென்று, அவ்வரசனுடைய அரண்மனையில் தாழ்ந்த வேலைகளில் நுழைந்துகொண்டார்கள்.

யுதிஷ்டிரர், சூது விளையாட்டிலே சமர்த்தரானதினாலே, அவர் அரசனிடம் பிராஹ்மண மந்திரியானார்.

பீமன்: சமையற்காரனாக நியமிக்கப்பட்டான்.

அர்ஜுனன்: பேடிபோன்று வேஷம் தரித்து ராகுமாரியான உத்தரைக்கு நாட்டியமும் சங்கீதமும் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாய ராக்கப்பட்டு, அரசனுடைய அந்தப்புரத்தில் இருந்தான்.

நகுலன்: அரசனுடைய குதிரைகளைப் பரிபாலிப்பவனானான்.

சகாதேவன்: பசுக்களின் பரிபாலனத்தை அடைந்தான்.

திரௌபதி: தாதியைப் போன்று வேஷ மிட்டுக் கொள்ள, ராணியின் அந்தப்புரத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டாள்.

இவ்விதமாகப் பாண்டவ சகோதரர்கள் தங்களுடைய சொரூபத்தை மறைத்துக்கொண்டு பத்திரமாக ஒரு வருஷம் கழித்தார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதற்குத் துர்யோதனன் செய்த முயற்சிகள் பிரயோசனமற்றதாயின. வருஷம் முடிந்தவுடனேதான் அவர்கள் கண்டுபிடிக்கப் பட்டார்கள்.

பின்னர் யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனிடம் ஒரு தூதரை யனுப்பி, தங்களுடைய பங்காக ராஜ்யத்தில் பாதி தங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டார். ஆனால், துர்யோதனன் தன்னுடைய பங்காளிகளிடத்து விரோதபாவம் கொண்டிருந்ததினாலே, அவர்களுடைய நியாயமான கேள்விகளுக்குச் சம்மதிக்கவில்லை. அவர்கள் ஒரு தேசத்தை, இல்லை, ஐந்து கிராமங்களைக்கூட ஒப்புக் கொள்ள மனமுடையவர்களா யிருந்தார்கள். ஆனால், மூளை தடித்த துர்யோதனன், அவர்கள் யுத்தத்தில் ஜயித்தாலன்றி, ஒரு ஊசி முனையளவுகூடப் பூமி கொடுப்பதில்லை" என்று கூறிவிட்டான்.

திருதராஷ்டிரன் மறுபடியும் மறுபடியும் சமாதானத் துக்காகப் பாடுபட்டான்; ஆனால், எல்லாம் வீணாயின.

கிருஷ்ணனும் சென்று நேரிடவிருக்கும் யுத்தத்தையும், அதனால் ஏற்படும் பந்துக்களுடைய மரணத்தையும் தடுப்பதற்கு முயன்றார்; அரண்மனையிலிருந்த ஆன்றோர்களும் முயன்றார்கள். ஆனால், ராஜ்யத்தைச் சமாதானமாகப் பகிர்ந்துகொள்வதற்குச் செய்த எல்லா முயற்சிகளும் பயனற்றவையாய்விட்டன.

கவனியுங்கள்! அந்நாட்களில்—நமது கதை நடந்த காலத்தில்—யுத்த சாஸ்திரமென்பது சாதாரணமாக வில்லுகளையும் அம்புகளையும் உபயோகித்தல் மாத்திரம் அன்று; மந்திரங்களின் உபயோகம், ஏகாக்ரசித்தம் முதலிய மிக முக்கியமாக உபயோகிக்கப்படுகின்ற மாயாஜால வித்தையாம்.

ஒருவன் லக்ஷக்கணக்கான மனிதர்களுடன் போர் புரிந்து, அவர்களை நினைத்தமாத்திரத்தில் எரித்துவிட முடியும். அவன் ஒரு அம்பைச் செலுத்துவான்; அது கர்ச்சனை புரிந்து, ஆயிரக்கணக்கான அம்புகளைப் பொழியும்; அவன் எதுவும் எரிந்துபோகும்படி செய்ய முடியும். இப்படியே பல செய்ய முடியும்—அதெல்லாம் தெய்வீக மாயாவித்தை.

இராமாயணம், மகாபாரதம் இவ்விரு காவ்யங்களிலும் ஒரு விஷயம் மிகமிக ஆச்சர்யமானது,—இந்த அதிசாமர்த்திய அம்புகள் இருந்ததும் இந்தவிஷயங்களெல்லாம் நடைபெற்றதும் தவிர, முன்னமேயே பீரங்கி உபயோகத்திலிருந்ததை நீங்கள் பார்க்கலாம். பீரங்கியானது சீனர்களாலும் ஹிந்துக்களாலும் கையாளப்பட்டு வந்த மிகமிகப் பழைய சங்கதி.

நகரங்களின் சுவர்களின்மீது இரும்புக் குழாய்களால் ஆக்கப்பெற்ற ஆச்சர்யமான ஆயுதங்கள் நூற்றுக்கணக்காக இருந்தன; அவை மருந்தும் தோட்டாவும் நிரப்பப்பட்டு விட்டால், நூற்றுக்கணக்கான மனிதர்களைக் கொன்று விடும்.

'சீனர்கள் மந்திர ஜாலத்தினாலே இரும்புக்குழாய்க்குள்ளே பிசாசை வைக்கிறார்கள்' என்று ஜனங்கள் நம்பினர்.

கள். 'ஒரு துவாரத்துக்கு நெருப்பு வைத்தமாத்திரத்திலே, பிசாசானது பயங்கரமான சப்தம் செய்துகொண்டு வெளியே வந்து அநேக ஜனங்களைக் கொல்கிறது.' (என்று ஜனங்கள் நம்பினார்கள்).

ஆகையினால், அந்தப் பழைய நாட்களிலே அவர்கள் மந்திர சகித அம்புகளை வைத்துக்கொண்டு யுத்தம் செய்வது வழக்கம். ஒரு மனிதன் லக்ஷக்கணக்கான மனிதர்களுடனே யுத்தம் செய்ய வல்லவனாயிருப்பான். அவர்களுக்கு யுத்த அணி வகுப்புக்களும் தந்திரங்களும் உண்டு.

பதம் என்று சொல்லப்பட்ட காலாட்படை யுண்டு; பின்னர், துரகம் என்ற குதிரைப்படை; இக்காலத்தினர் கைவிட்டுவிட்ட வேறு இரண்டுவிதப் படைகள்;—யானைப் படை யிருந்தது,—முதுகுகளிலே மனிதர்களுடன் எத்தனையோ நூற்றுக்கணக்கான யானைகள் படைகளாகி, பெரிய இரும்புத் தகடுகளால் மூடப்பட்டிருந்தன; இந்த யானைகள் எதிரியின் கூட்டத்துக்குள்ளே பாய்ந்து விழும். இன்னும் ரதங்களும் இருந்தன. அந்தப் பழைய ரதங்களின் படங்களை நீங்களெல்லோரும் பார்த்திருக்கலாம்; அவை ஒவ்வொரு தேசத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன. இந்தப் பழைய நாட்களிலே இவை சைந்யத்தின் நான்கு பிரிவுகளாயிருந்தன.

இப்பொழுது, இரு கட்சியாரும் ஒரேமாதிரி கிருஷ்ணனுடைய சிநேகத்தை யடைவதற்கு விரும்பினார்கள். ஆனால், அவர் நேரே கலந்துகொண்டு முன்னுக்கு நின்று இந்த யுத்தத்தில் யுத்தம் செய்ய மறுத்துவிட்டார்; ஆனால், அர்ஜுனனுக்குச் சாரதியாக ஒப்புக்கொண்டார்; பாண்டவர்களுக்

குச் சிநேகிதராய், புத்திமதி கூறுவோராய் இருந்தார்; துர்யோதனனுக்கோ அவர் பராக்கிரமம் மிகுந்த வீரர்களடங்கிய தமது சைந்யத்தைக் கொடுத்தார்.

பின்னர் பெரிய குருக்ஷேத்ர பூமியிலே பெரும் யுத்தம் நடந்தது; அதில் பீஷ்மர், துரோணர், கர்ணன், துர்யோதனனுடைய சகோதரர்கள், இருபக்கங்களிலு மிருந்த பந்துஜனங்கள், ஆயிரக்கணக்கான வேறு வீரர்கள், எல்லோரும் விழுந்து இறந்தார்கள்.

யுத்தம் பதினெட்டுநாட்கள் நடந்தன. உண்மையில், பதினெட்டு அக்குரோணி வீரர்களில் மிகவும் சிலரே மிகுதியிருந்தனர். துர்யோதனன் மரணமடைந்தவுடனே, பாண்டவர்களுக்கு அநுகூலமாக யுத்தம் முடிந்தது. பின்னர் ராணியாகிய காந்தாரியும் விதவைகளான ஸ்திரீகளும் அழுதார்கள்; இறந்துபோன வீரர்களுக்கு உத்தரக்கிரியைகள் நடந்தேறின.

யுத்தத்திலே மிகமிகப் பெரிய விஷயம் யாதெனில், கீதை யெனப்பட்ட ஆச்சர்யமான, அழிவற்ற காவ்யமேயாகும். அதுதான் இந்தியாவில் ஜனங்களால் மிகமிகப் போற்றப்பட்ட சாஸ்திரம். உபதேசங்கள் எல்லாவற்றுள்ளும் மிகமிகச் சிறந்தது. குருக்ஷேத்திர யுத்தகளத்திலே யுத்தம் ஆரம்பிப்பதற்குச் சற்றுமுன் அர்ஜுனனுக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த சம்பாஷணையேயாகும் அது.

உங்களில் அந்தப் புஸ்தகத்தைப் படிக்காதவர்கள் அதைப் படிக்கவேண்டுமென்று நான் கூறுவேன். உங்களுடைய சொந்த தேசத்திலே அது எவ்வளவு செல்வாக்கைச் செலுத்தியிருக்கிறது தெரியுமா! நீங்கள் எமர்ஸ

னுடைய அருள் உணர்ச்சிக்கு ஆரம்பத்தை யறிய விரும்பினால், அது கீதையாம்; இந்தப் புஸ்தகமே யாகும். அவன் கார்லைலைப் பார்க்கச் சென்றான்; கார்லைல் கீதையை அவனுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்; அச் சிறிய புத்தகம் தான் ஒற்றுமை யியக்கத்துக்குப் பொருப்பாளியானது. அமெரிக்காவிலுள்ள எல்லாப் பெரிய இயக்கங்களும் ஏதேனும் ஒரு வழியில் ஒற்றுமைக் கட்சியாருக்குக் கடமைப்பட்டிருக்கின்றன.

கீதையின் மத்திய உருவம் ஸ்ரீகிருஷ்ணனும். ஈச்வரன் மனிதனாக வந்தானென்று நீங்கள் நாஸரேத் இயேசுவைப் பூஜிப்பது போல, ஹிந்துக்கள் ஈச்வரனுடைய அநேக அவதாரங்களைப்பூஜிக்கின்றார்கள். அவர்கள் ஒன்று, இரண்டில் மாத்திரம் நம்புகிறதில்லை; ஆனால், உலகத்தின் அவசியங்களுக் கேற்றவாறு தர்மத்தை ரக்ஷிப்பதற்கும் பாபத்தை யொழிப்பதற்கும் அடிக்கடி அவதரிக்கின்ற அநேகரை நம்புகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒருவர் உண்டு; கிருஷ்ணன் அவர்களில் ஒருவர்.

ஈச்வரனுடைய மற்றெந்த அவதார புருஷர்களைக் காட்டிலும் கிருஷ்ணனைப் பின்பற்றுவோர் ஒருவேளை பெருந்தொகையினரா யிருக்கலாம். "இந்த அவதாரபுருஷர்களுக்குள்ளே மிகமிகப் பூர்ணமானவர் அவரே" என்று அவரைப் பின்பற்றுவோர் கூறுகின்றார்கள். ஏன்? "ஏனென்றால், புத்தரையும் மற்ற அவதாரபுருஷர்களையும் பாருங்கள்; அவர்கள் சந்யாசிகளேயாயிருந்தார்கள்; அவர்களுக்கு இல்லறத்தாரிடத்திலே அநுதாபம் கிடையாது. அவர்களுக்கு எப்படி யிருக்கக்கூடும்? ஆனால், கிருஷ்ணனைப் பாருங்கள்;

அவர் புத்திரனுக, அரசனுக, பிதாவாக, பெரியோராயிருந்தார்; அவருடைய வாழ்க்கை முழுதும் அவர் தாம்போதித்த ஆச்சரியமான போதனைகளை யநுஷ்டித்து வந்தார்'' என்று அவர்கள் கூறுகின்றுர்கள். “மிகமிக அதிகமான சுறுசுறுப்பின் மத்தியிலே, மிகமிக இனிய சாந்தத்தையும், மிகமிக அதிகமான அமைதியின் மத்தியில் மிகுந்த சுறுசுறுப்பையும் எவனொருவன் காண்கிறுனே, அவனே ஜீவித ரகசியத்தை யறிந்தவன். கிருஷ்ணன் இது எப்படி யென்பதற்கு மார்க்கத்தைப் பற்றற்றிருத்தலினுலென்று நிரூபிக்கின்றுர்.

எல்லாம் செய், ஆனுல், எதனுடனும் ஒன்றுபட்டுக் கொள்ளாதே. நீ எப்பொழுதும் ஆத்மாவாய், பரிசுத்தனுய், ஸ்வதந்திரனு யிருக்கிறுய்; நீ சாக்ஷியா யிருக்கிறுய். நமது துக்கம் கர்மத்தினு லுண்டாகவில்லை; ஆனுல், ஏதோ ஒன்றை நாம் பற்றிக்கொள்வதினு லுண்டாகின்றது. திருஷ்டாந்தத்துக்குப் பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்:—பணமானது வைத்துக்கொள்வதற்கு ஒருபெரிய விஷயம்;“அதைச் சம்பாதி'' என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறுர்: பணத்தைச் சம்பாதிப்பதற்குக் கஷ்டப்பட்டு வேலை செய்: ஆனுல், அதனிடத்தில் பற்றுதல் வைத்துக்கொண்டு விடாதே: நீ அவற்றை விலக்கவேண்டிய அவசிய மில்லை, பற்றுதல் மாத்திரம் வைத்துக்கொள்ளாதே.

ஒரே ஒரு பற்றுதல்தான் உண்டு; அது ஈச்வரனைச் சேர்ந்தது, வேறெவரையும் சேர்ந்ததன்று. அவற்றுக்காக வேலை செய், அவற்றை நேசி; அவர்களுக்கு நன்மை செய், அவர்களுக்காக அவசியம் நேரிட்டால், நூறு ஜன்மங்க

ளைத் தியாகம் செய்; ஆனால், ஒருபொழுதும் பற்றுதல் வைத்துக்கொள்ளாதே. அவருடைய சொந்த ஜீவிதமே அதற்கு நேர் திருஷ்டாந்தமா யிருந்தது.

ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரத்தைவிரித்துக்கூறுகின்ற புத்தகமானது அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முந்திய தென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவருடைய சரித்திரத்தில் சில பாகங்கள் நாஸரேத் இயேசுவினுடைய சரித்திரத்தின்சில பாகங்களை மிகவும் ஒத்திருக்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணன் ராஜவம்சத்தினர். கம்சன் என்று ஒரு கொடுங்கோலாசன் இருந்தான். "இன்ன குடும்பத்திலே அரசனாவதற்கு ஒருவன் பிறப்பான்" என்று தீர்க்கதரிசனம் ஒன்று இருந்தது. ஆகையினால், கம்சன் எல்லா ஆண் குழந்தைகளையும் கொலை செய்துவிடும்படி உத்தாவிட்டான். ஸ்ரீ கிருஷ்ணனுடைய பிதாவும் மாதாவும் அரசன் கம்சனால் சிறையி லிடப்பட்டார்கள்; அங்கே குழந்தை பிறந்தது. திடீரென்று சிறைக்கூடத்திலே ஒரு ஜோதி பிரகாசித்தது; குழந்தை, "நான் உலகின் ஜோதி, உலகின் நன்மைக்காகப் பிறந்திருக்கின்றேன்" என்று சொல்லிற்று.

ஸ்ரீ கிருஷ்ணனை அறிகுறியாகப் பசுக்களுடனே குறிப்பிட்டிருக்கிறதை நீங்கள்பார்க்கலாம். "பெரிய இடையன்" என்று அழைக்கப்படுகிறார். ஈச்வானே அவதரித்தார் என்று மகரிஷிகள் உறுதிகொண்டு, அவரைத் தரிசனம் செய்யச் சென்றார்கள். கதையின் மற்ற பாகங்களில், இரண்டுக்கும் உள்ள ஒற்றுமை தொடர்கிறதில்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் இந்தக் கொடுங்கோலனாகிய கம்சனை ஜயித்தார். ஆனால், அவர் ஸிம்ஹாசனத்தைத் தாம் ஏற்றுக்

கொள்ளவோ, அல்லது அநுபவிக்கவோ ஒருபொழுதும் நினைத்ததில்லை. அவருக்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை. அவர் தமது கடமையைச் செய்துவிட்டார்; அங்கே அது முடிவுற்றது.

குருக்ஷேத்திர யுத்தம் முடிந்தபிறகு, மகாவீரரும் கிழவரும் ஆன பீஷ்மர்—பதினெட்டு நாள் யுத்தத்திலே பத்து நாட்கள் யுத்தம் செய்தவர்—இன்னும் அவருடைய மரணபடுக்கையிலே படுத்துக்கொண்டு, பூர்வீக மகரிஷிகளின் போதனைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு, ராஜ தர்மம், சதுர்வர்ணங்களின் தர்மம், ஜீவிதத்தில் நான்கு ஆச்ரமங்கள், விவாக நியதிகள், தானதர்மவிதிகள் முதலிய பலவிஷயங்களைப்பற்றி யுதிஷ்டிரருக்கு உபதேசம் செய்தார். அவர் சாங்கிய சாஸ்திரத்தையும் யோகசாஸ்திரத்தையும் விரித்துக் கூறி, மகாத்மாக்கள்—தேவர்கள்—அரசர்கள் இவர்களைப்பற்றியுள்ள அநேகம் கதைகளையும் சரித்திரங்களையும் கூறினார்.

இந்தப் போதனைகள் அந்தப் புஸ்தகத்தில் நான்கிலொருபாகமாயிருந்துகொண்டு ஹிந்து நியதிகள், தர்ம சாஸ்திரங்கள் முதலியவை யடங்கிய விலையற்ற களஞ்சியமாயிருக்கின்றன. இதனிடையில் யுதிஷ்டிரர் அரசனைக் கிரீடம் தரிக்கப்பட்டார். ஆனால், பலமாக ரத்தம் சிந்தியதும் பெரியோர்களும் பந்துக்களும் அழிந்ததும் அவருடைய மனத்தைப் பலமாகப் பிடித்து வருத்தின; அப்பொழுது, வியாசருடைய புத்திமதியின்மேல் அவர் அசுவமேத யாகம் செய்தார்.

யுத்தம் முடிந்தபின், யுதிஷ்டிரரும் அவருடைய சகோதாரும் கீழ்ப்படிந்து நடக்க, திருதராஷ்டிரன் பதினைந்து வருஷம் சமாதானமாயும் கௌரவமாயும் வாழ்ந்துவந்தான். பின்னர், விருத்தாப்பியனான அரசன் ஸிம்ஹாசனத்திலே யுதிஷ்டிரரை வைத்துவிட்டுத் தன்னுடைய பிரியமுள்ள மனைவியையும், பாண்டவச் சகோதரர்களுடைய தாயாகிய குந்தியையும் கூட்டிக்கொண்டு, காட்டுக்குச் சென்றான்.

யுதிஷ்டிரர் தமது சக்ராதிபத்தியத்தைத் திரும்பவும் அடைந்து, இப்பொழுது முப்பத்தாறு வருஷங்களாயின. அப்பொழுது 'ஸ்ரீ கிருஷ்ணன் தமது மனுஷ்ய சரீரத்தை விட்டுவிட்டார்' என்ற சமாசாரம் கிடைத்தது. மகாத்மாவாய், அவருடைய நண்பராய், அவருடைய தீர்க்கதர்சியாய், அவருக்குப் புத்தி கூறுவோராய் இருந்த ஸ்ரீ கிருஷ்ணன் போய்விட்டார். அர்ஜுனன் துவாரகைக்கு உடனே வேகமாகச் சென்றுவிட்டு, ஸ்ரீகிருஷ்ணனும் யாதவர்களும் எல்லோரும் மரித்துவிட்டார்களென்றதுக்கசமாச்சாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டு திரும்பிவந்தான்.

பின்னர் அரசரும் மற்றச் சகோதரர்களும் விசனம் மிகுந்தவர்களாய்த் தங்களுக்கும் செல்வதற்குக் காலம்வந்துவிட்டது என்று கூறினார்கள். அப்படியே அவர்கள் ராஜரீகச் சுமையை எறிந்துவிட்டு, அர்ஜுனனுடைய பேரப்பிள்ளையாகிய பரீக்ஷித்தை ஸிம்ஹாசனத்தில் வைத்துவிட்டு, ஹிமோத்கிரிபர்வதத்துக்கு மகாப்ரஸ்தானம்என்ற மகாயாத்திரை சென்றார்கள். இது ஒரு விசேஷமாதிரியான சந்யாசம்.

விருத்தாப்பிய அரசர்கள் சந்யாசிகளாவது வழக்கம். பூர்வீக இந்தியாவில் மனிதர்கள் மிகவும் கிழவர்களாய்விட்

டால், அவர்கள் எல்லாவற்றையும் துறந்துவிடுவார்கள். அப்படியே அரசர்களும் செய்தார்கள். இனிமேல் வாழ்வதற்கு விரும்பாவிட்டால், அவன் உண்ணுமல், அல்லது தண்ணீர் குடியாமல், ஹிமோத்கிரியை நோக்கி மேலும் மேலும் சரீரம் விழுகிறவரையில் நடப்பான். அவன் அப்பொழுதெல்லாம் ஈச்வரனையே சிந்தித்துக்கொண்டு, சரீரம் விழுகிறவரையில் நடப்பான்.

பின்னர் தேவர்கள், மகாத்மாக்கள் வந்தார்கள்; அவர்கள் யுதிஷ்டிரராஜனை நோக்கி, அவர் சென்று மோக்ஷம் அடையவேண்டுமென்று கூறினுர்கள். மோக்ஷம் செல்வதற்கு, மனிதன் ஹிமோத்கிரியின் மிகமிக உயர்ந்த சிகரங்களைக் கடக்கவேண்டும். ஹிமோத்கிரிக்கப்பால் மேருமலையுள்ளது. மேருமலையின் சிகரத்தில் மோக்ஷலோக மிருக்கிறது. எவரும் (இச்)சரீரத்துடன் எப்பொழுதும் அங்குச் சென்றதில்லை. அங்கே தேவர்கள் வசிக்கின்றுர்கள். யுதிஷ்டிரர் அங்கு வரும்படி தேவர்களால் அழைக்கப்பட்டார்.

ஆகையால், ஐந்து சகோதரர்களும் அவர்களுடைய மனைவியும் மரவுரி யுடைகளுடுத்துக்கொண்டு, தங்கள் யாத்திரையில் புறப்பட்டார்கள். வழியில் அவர்களையொரு நாய் பின் தொடர்ந்தது மேலும்மேலும் அவர்கள் சென்றுர்கள்; அவர்கள் ஹிமோத்கிரி தனது உயர்ந்த சிகரங்களை உயரத் தூக்கிக்கொண்டு நிற்கின்ற இடம் நோக்கி வடபக்கமாகத் தங்கள் களைத்துப்போன பாதங்களைத் திருப்பினுர்கள். அவர்கள் பிரமாண்டமான மேருமலையைத் தங்கள் முன்னே கண்டார்கள். மௌனமாக அவர்கள்

பனியில் நடந்தார்கள்; திடீரென்று ராணி இனி எழுந்திருக்க முடியாதபடி விழுந்துவிட்டாள்.

முன்னே வழிகாட்டிச் சென்றுகொண்டிருந்த யுதிஷ்டிரரை நோக்கி, சகோதரர்களுள் ஒருவனாகிய பீமன், "ஏ அரசே! பாருங்கள்! ராணி விழுந்துவிட்டாள்" என்றான்.

அரசர் கண்ணீர் விட்டார்; ஆனால், அவர் திரும்பிப் பார்க்கவில்லை. "நாம் ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்க்கப் போகின்றோம்" என்று அவர் கூறுகிறார். "திரும்பிப் பார்ப்பதற்கு நேரம் இல்லை; மேலே செல்லுங்கள்!"

சிறிது நேரத்துக்குப் பின், பீமன், "பாருங்கள்! நமது சகோதரன் சகாதேவன் விழுந்துவிட்டான்" என்றான்.

அரசர் கண்ணீர்விட்டார்; ஆனால், நிற்கவில்லை. "மேலே செல்லுங்கள்!" என்று அவர் கூச்சலிட்டார்.

குளிரிலும் பனியிலும் நான்கு சகோதரர்களும் ஒருவர்பின் ஒருவராக விழுந்துவிட்டார்கள்; ஆனால், சலிக்காமல், தனியாயிருந்தபொழுதிலும், அரசர் மேலே சென்றார்; அவர் திரும்பிப் பார்த்தார்; விசுவாசமுடைய நாயானது இன்னும் அவரைப் பின்தொடர்வதைக் கண்டார். பனியினூடும், பனிக்கட்டியினூடும், குன்றின்மேலும், மேட்டின்மேலும், மேன்மேலும் உயர, அரசரும் நாயும் ஏறிச் சென்றார்கள்; கடைசியாக மேருமலையை அடைந்தார்கள். அங்கே அவர்களுக்கு ஸ்வர்க்கலோக சப்தம் கேட்க ஆரம்பித்தது; திவ்விய புஷ்பங்கள் தர்மராஜாவின்மீது தேவர்களால் பொழியப்பட்டன. பின்னர் தேவர்களுடைய விமானம் இறங்கிற்று.

இந்திரன் அவரை நோக்கி, "மனுஷ்யர்களுக்குள் சிரேஷ்டரே! இந்த ரதத்தில் ஏறுங்கள்! மனுஷ்ய சரீரத்தை மாற்றிக்கொள்ளாமல் ஸ்வர்க்கத்தில் நுழைவதற்கு நீங்கள்

மாத்திரந் தான் கொடுத்துவைத்திருக்கிறீர்கள்,'' என்று பிரார்த்தித்தான்.

ஆனால், முடியாது; தமது அருஞ்சகோதரர்களும் ராணியு மில்லாமல், யுதிஷ்டிரர் செல்லமாட்டார்; சகோதரர்கள் அவருக்கு முன்னே அங்கே சென்றுவிட்டார்களென்று இந்திரன் கூறினான்.

யுதிஷ்டிரர் சுற்றிப் பார்த்து, தமது நாயை நோக்கி, "குழந்தாய்! ரதத்தி லேறு" என்றார்.

(இந்திரனாகிய) தேவன் பிரமித்துவிட்டான். "என்ன! நாயா? இந்த நாயைத் துரத்திவிடுங்கள்! நாய் ஸ்வர்க்கத்துக்குச் செல்கிறதில்லை! பேரரசரே! என்ன நினைக்கிறீர்கள்? உங்களுக்குப் பைத்தியமா? மனுஷ்யஜாதியிலே தர்மகுணங்களில் மிகமிகச் சிரேஷ்டரான நீங்கள், நீங்கள்மாத்திரம் உங்கள் சரீரத்துடன் ஸ்வர்க்கம் செல்ல முடியும்,'' என்று கூச்சலிட்டான்.

ஆனால், அது பனியினூடும் பனிக்கட்டியினூடும் என்னிடத்து அன்புமிகுந்ததோழனாயிருக்கிறது; எனது சகோதரர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள்; எனது ராணியும் இறந்துவிட்டாள்; இதுமாத்திரம் என்னை யொருபொழுதும் விட்டு நீங்கினதில்லை.''

"ஸ்வர்க்கத்திலே மனிதர்களுக்கு நாய்களுடன் இருப்பதற்கு இடமில்லை; அது இங்கு விட்டுவிடப்படத்தான் வேண்டும்; இதில் நியாயமல்லாதது ஒன்று மில்லை.''

அரசர் மறுமொழி கூறியதாவது: "நாய் வாராவிட்டால், நான் ஸ்வர்க்கம் செல்வதில்லை; எனது ஜீவிதத்தின் முடிவு வரையில் என்னிடம் அபயம் புகுந்துள்ள அதை நான் ஒரு பொழுதும் விட்டுவிடமாட்டேன். ஸ்வர்க்க போகங்களை உத்தேசித்து, அல்லது ஒரு தேவன் சொல்கிறானென்றாவது நான் நியாயத்தினின்றும் ஒருபொழுதும் நழுவமாட்டேன்.

அப்படியானால், ஒரு நிபந்தனையின்மேல் நாய் ஸ்வர்க்க லோகம் செல்லலாம். நீங்கள் மனுஷ்யர்களுக்குள்ளே நற்

ணங்களில் மிகமிகச் சிறந்தவராயிருக்கின்றீர்கள் ; அது ாய்; மிருகங்களைக் கொன்றும் தின்றும் இருந்திருக்கிறது; அது வேட்டையாடி, இதர ஜீவராசிகளைக் கொன்று பாபம் நிறைந்ததாயிருக்கிறது; நீங்கள் ஸ்வர்க்கத்தை யவர்க்குஅளித்து, மாற்றிக்கொள்ள முடியும்'' என்று இந்திரன் கூறினன்.

அரசர், "சம்மதம், நாய் ஸ்வர்க்கம் செல்லட்டும்'' என்று கூறுகிறார்.

உடனே, காட்சி மாறிவிட்டது. யுதிஷ்டிாருடைய இந்த மேம்பட்ட வார்த்தைகளைக் கேட்டவுடனே, நாயானது தர்ம சொரூபமாக வெளிப்பட்டது; நாயானது மரணத்துக்கும் நீதிக்கும் அதிபதியாகிய எமனைத் தவிர, வேறில்லை. தர்மன் கூறியதாவது, "ஏ, அரசே! பாரும்! ஒரு சிறிய நாய்க்கு ஸ்வர்க்கத்தை யளித்துவிட மனமுடைத்தாயிருந்த உம்மைப்போல ஸ்வயநலமற்று எவனும் இருந்ததில்லை. ஏ, ராஜாதிராஜ! உம்முடைய பிறப்புப் சுபமாயிற்று. ஏ, பாரத! எல்லா ஜீவராசிகளிடத்தும் உமக்கு இரக்கம் இருக்கிறது; அதற்கு இது ஒரு சிறந்த திருஷ்டாந்தம். ஆகையால், ஆநந்தப் பிரதேசங்களெல்லாம் உன்னுடையவையே! ஏ, அரசே! நீ அவற்றை ஜயித்துவிட்டாய்; திவ்யமானதும் உயர்ந்ததுமானது உனது லக்ஷியம்!''

பின்னர் யுதிஷ்டிரர் இந்திரனுடனும், தர்மனுடனும், இதர தேவர்களுடனும், ஒரு திவ்ய ரதத்திலேறி ஸ்வர்க்கம் செல்கிறார். அவர் சில பரிசோதனைகட்கு உட்படுகிறார்; தேவகங்கையில் ஸ்நாநம் செய்கிறார். திவ்ய சரீரம் பெறுகிறார். அவர் இப்பொழுது அமரர்களாகிவிட்ட தமது சகோதரர்களைச் சந்திக்கின்றார்; எல்லாம் கடைசியில் ஆநந்தமாய்விடுகிறது.

அழகியதொருகாவ்யத்திலே அதர்மத்தின் தோல்வியையும் வர்ணித்துக்கொண்டு, மகாபாரதக் கதையானது இவ்விதம் முடிவடைகிறது.

மகாபாரதத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்கையில் தீரரும் மகா மேதாவியுமான ஸ்ரீ வியாசரால் வர்ணிக்கப்பட்டுள்ள பராக்கிரமசாலிகளான வீரர்களுடைய பெரிய, கம்பீரமான லக்ஷணங்களை முடிவில்லாமல் அவர் பகுத்திருப்பதை எடுத்துக்கூற என்றால் அசாத்தியமாகும். தெய்வபயமிருந்தும் பலஹீனனும் கிழவனுமாகிய அரசன் திருதராஷ்டிரனுடைய மனத்திலே நியாயத்துக்கும் புத்திரவாத்ஸல்யத்துக்கும் ஏற்பட்ட உள்முகச் சஞ்சலங்கள், பாட்டனாராகிய பீஷ்மருடைய கம்பீரமான லக்ஷணம், யுதிஷ்டிர ராஜனுடைய சிறந்த தர்மஸ்வபாவம்; மற்ற நான்கு சகோதரர்களுள் பக்தியிலும் அன்பிலும் சிறந்திருத்தல்போலவே பராக்ரமத்திலும் வன்மை, மனுஷ்ய ஞானத்திலே நிகாற்ற ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஈடற்ற லக்ஷணம், சிறப்பில் குறைந்தனவல்ல. ஸ்திரிகளுடைய லக்ஷணங்கள் பட்டமகிஷியாகிய காந்தாரி, அன்புள்ள மாதா குந்தி, என்றும் பக்தியும் எப்பொழுதும் துன்பமுமுள்ள திரௌபதி;— இவர்களும் இந்த இதிகாசத்திலுள்ள நூற்றுக்கணக்கான மற்றவர்களும், ராமாயணத்திலுள்ளவர்களும் சென்ற பல்லாயிரம் வருஷங்களாக ஹிந்து உலகம் முழுதும் பத்திரமாய் வைத்திருக்கும் பிதுரார்ஜித சொத்தாகி, அவர்களுடைய சற்குண சத்திய சிந்தனைகளுக்கும் ஆதாரமாயிருந்து வருகிறது. உண்மையில் இராமாயணமும் மகாபாரதமும் பூர்வீக ஆர்ய வாழ்க்கையையும் ஞானத்தையும்பற்றிய இரண்டு பிரமாண்டமான புத்தகங்கள், இருக்கவேண்டிய மாதிரி நாகரிகத்தை யெடுத்துக் காட்டுகின்றன. மனுஷ்ய ஜாதி இனிமேல்தான் இந்த நாகரிகத்துக்கு ஆசைப்பட வேண்டும்.

மஹாபாரத ரகசியம்
முற்றிற்று.

Printed at The Guardian Press, 158-B. Broadway, Madras.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்